பக்கங்கள்: 16

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 30 திங்கட்கிழமை 13.02.2023 கதிர் 97

**இனி இது ரகசியம் அல்ல!**

வருகின்ற வெள்ளிக்கிழமை மவண்டலவேனியா நீதிவான் மன்றத்தில் ஒரு வழக்கு விசாரணைக்கு வருகின்றது. வீட்டுவ எவு மோசடி தொடர்பான ஒரு வழக்கு. அந்த விசாரணையில் தமிழ்க் கட்சி ஒன்றின் முக்கிய மான நபர்

2

### தெற்கிலே பெரும் மாற்றம் மீண்டும் ஏற்பட வாய்ப்புள்ள நேரத்தில்

# வடக்கு – கிழக்கு மக்களின் ஆணையிலே மாற்றமில்லை என்ற செய்தி முக்கியம்

## அதற்குத் தமிழ் அரசுக் கட்சி வெல்லவேண்டும் சுமந்திரன் நேற்று எடுத்துரைப்பு

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், பெப்.13

தெற்கிலே மீண்டும் ஒரு பெரும் மாற்றம் ஏற்படும் வாய்ப்பு இருக்கின்றது. அப்போது வடக்கு - கிழக்கு மக்கள் வழங்கிய ஆணையில் மாற்றம் இல்லை என்ற செய்தி ஆணித்தரமாக அரசியல் அரங்கில் பதிவு செய்யப்படவேண்டும். அதற்கான களமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் பார்க்கப்படுகின்றது. எனவே தமிழ் அரசுக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன்.

2



## தேர்தலை நடத்தப் பணம் வழங்காவிட்டால் மக்களைத் திரட்டி வீதியில் இறங்குவோம்!

### ஜே.வி.பியின் தலைவர் அநுர எச்சரிக்கை



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களைத் திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப் போவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

எப்படியாவது இந்தத் தேர்தலை ஒத்திப்போட வேண்டும் என்பதில் இந்த அரசு குறியாகவே இருக்கின்றது. அதற்காக

2

## மற்றைய கட்சிகளுடனும் பேசித்தான் தனித்துப் போட்டியிட முடிவுசெய்தோம்

### அதைச் செல்வமே ஒத்துக்கொண்டிருக்கிறார் என்கிறார் சுமந்திரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளிடம் பேசித்தான் தனியாகப் போட்டியிடும் முடிவு எடுக்கப்பட்டது. அதனை ரெலோ தலைவர் செல்வம் அடைக்கல நாதன் ஒரு பத்திரிகைப் பேட்டியிலே வெளிப்படையாக ஒப்புக்கொண்டும் இருக்கிறார். அப்படியிருக்க தமிழ் அரசு கூட்டமைப்பிலிருந்து பிரிந்துபோனது என்று சொல்வது பொய்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

ரெலோ தலைவர் மன்னாரில் செய்தியாளர்களிடம் தமிழ் அரசுக் கட்சியைத் தாக்கிப் பேசமாட்டோம் என்று தெரிவித்திருந்தார். ஆனால் அவரது அணியில் உள்ளவர்கள்

2

## இளம் சந்ததியினரை போதையிலிருந்து மீட்க தமிழ் அரசு வேட்பாளர்கள் முன்வரவேண்டும்

### அறிமுகக் கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை அழைப்பு





(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், பெப்.12

இன விடுதலைக்காக உழைக்க முன் வந்த வேட்பாளர்கள் எமது இளம் சந்ததி போதையில் இருந்தும் விடுதலை பெற உழைக்க வேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராஜா உள்ளூராட்சி வேட்பாளர்களிடம் அழைப்பு விடுத்தார்.

8

## உணவு கேட்டு எம்.பிக்களுக்கு மக்கள் தொலைபேசி அழைப்பு

மக்கள் எம்.பிக்களுக்குத் தொலைபேசி அழைப்புக்களை எடுத்துப் பணம் தாருங்கள், பால் மா தாருங்கள், உணவு தாருங்கள் என்று கேட்கின்றார்கள்.

– இவ்வாறு எதிரணி எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார நிலைமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகின்றது என்று அரச தரப்பு கூறி வருகின்ற போதிலும் நடைமுறையில் அப்படி எதையும் காணக்கூடியதாக இல்லை.

மக்கள் உணவுக்காக அலைவதை அறியக்கூடியதாக இருக்கின்றது. மக்கள் இப்போது அவர்கள் வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பிய

2

## கட்சிகளின் செயலாளர்கள் ஆணைக்குழுவுக்கு அழைப்பு

கொழும்பு, பெப்.13

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்த அறிவிப்பு இதுவரை வெளியிடப்படாமை உள்ளிட்ட பல காரணிகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சகல கட்சிகளினதும் செயலாளர்களும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் இன்று இந்தக் கலந்துரையாடலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் சிரேஸ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு இந்த ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை

### எரான் எம்.பி. குற்றச்சாட்டு



இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு இந்த ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேலும் கருத்துத்

8

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும் சிக்கிக்கொண்டுள்ளார். ஒருவேளை இந்த வழக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் கடும் தாக்கத்தை, பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். ஏன் தோல்வியையேகூட ஏற்படுத்தக்கூடும். ஏனெனில் காணி, நிலம் என்பது தமிழர்களைப் பொறுத்தவரை உயிருக்குச் சமம்.

கொழும்பில் ஒருவர் ஒரு வீட்டை விற்றிருக்கிறார். அதனை மற்றொருவர் வாங்கியிருக்கிறார். அதிலென்ன புதினம் என்கிறீர்களா. வரப்போகிற விடயங்களை கவனமாக வாசியுங்கள்.

காணியை வாங்கியவர் அரசியல் கட்சி ஒன்றின் தலைவர். காணியை விற்றவர் அந்தத் தலைவரின் வாகனச் சாரதி. அதில் விற்றவர் தரப்பாகச் சாட்சிக் கையெழுத்துப்போட்டவர் மற்றொரு தமிழ் அரசியல் கட்சியின் முக்கிய நபர். தமிழ்த் தேசிய அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு தமிழ் அரசுக்கட்சியில் ஒரு தரப்பினர் காரணம் என்று கூறப்படுவதுபோன்று அதற்கு நிகராக மற்றத் தரப்பில் நிறுத்தப்படக்கூடியவர்.

இவர்கள் காணியை விற்றது வாங்கியது சாட்சிக் கையெழுத்துப் போட்டதில் அல்ல பிரச்சினை. யாருக்கோ சொந்தமான காணியை அந்த நபர் இறந்த பின்னர் அவரது பெயரில் அடையாள அட்டையைத் தமது ஆளுக்கு மாற்றி அவரைக் கொண்டு விற்பதாகக் காட்டி மோசடியாக வீட்டை வாங்கியிருக்கிறார்கள் என்பதுதான் பிரச்சினை.

தெளிவாகச் சொல்கின்றேன் கேளுங்கள்.

அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் கொழும்பில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து வாழ்கின்றார். அந்த வீட்டு உரிமையாளர் வெளிநாடு ஒன்றில் வசிப்பவர். அவர் கொழும்பில் தங்கியிருந்த சமயமே வீட்டை வாடகைக்குக் கொடுக்கிறார். அதன் பின்னர் தான் வசிக்கும் நாட்டுக்குத் திரும்பி விடுகின்றார். அங்கு அவர் இறந்தும் போய்விடுகிறார்.

வீட்டு உரிமையாளர் இறந்து போய்விட்டார் என்கிற செய்தி வீட்டில் வசித்து வந்த அரசியல் கட்சியின் உரிமையாளருக்குத் தெரியவருகின்றது.

அதன் பின்னர் ஒருநாள் அந்த வீடு அதில் வசித்து வந்த அரசியல்வாதிக்கே விற்கப்பட்டுவிடுகின்றது. ஆனால் அதை விற்றவர் இறந்துபோனாரே அந்த வீட்டு உரிமையாளர். அவர்தான் இறந்துபோய்விட்டாரே அது எப்படிச் சாத்தியம் என்கிறீர்களா?

அங்கேதான் மோசடியின் உச்சமே அரங்கேறி இருக்கின்றது என்கிறது பொலிஸ்.

வீட்டில் வசித்து வந்த அரசியல்வாதியின் சாரதியின் அடையாள அட்டையை வீட்டு உரிமையாளரின் பெயரில் மோசடியாகத் தயாரித்து, அதைப் பயன்படுத்தி சாரதிதான் வீட்டு உரிமையாளர் என்று சட்டத்தரணியை நம்ப வைத்து உறுதிப் பத்திரங்கள் எல்லாம் தயாரித்து வீட்டை அபகரித்துவிட்டார்கள்.

வீட்டு உரிமையாளரின் மனைவியும் பிள்ளைகளும் வெளிநாட்டில் இருந்து கொழும்புக்கு வந்தபோது அவர்களை மிரட்டி, அதட்டி அந்த வீடு விற்கப்பட்டுவிட்டது என்று கூறி அவர்களையும் விரட்டியடித்துவிட்டார்கள். திரும்பிப்போன அவர்கள் தம்மிடமிருந்த உண்மையான ஆவணங்களைக் கொண்டு தமது அற்றோணித் தத்துவக்காரர் ஒருவரை கொழும்புக்கு அனுப்பி வைத்தார்கள்.

வந்தவர் நேரே பொலிஸ் நிலையம் சென்று போட்டு வைத்தார். விசாரித்த பொலிஸாரும் நடந்தது மோசடி என்பதை அறிந்து அந்த அரசியல்வாதியையும் அவரது சாரதியையும் கைது செய்து நீதிமன்றக் காவலில் வைத்திருக்கிறார்கள்.

அந்தச் சாரதியோ இந்த மோசடி பற்றித் தனக்கு எதுவும் தெரியாது, கட்சியின் அடையாள அட்டை தருவதாகக் கூறித்தான் அடையாள அட்டைக்கான படிவத்தில் தன்னிடம் கையெழுத்துப் பெற்றார்கள் என்று பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்தார்.

இந்த இரண்டு பேரையும் கைது செய்த பொலிஸார் இந்த மோசடியில் சாட்சிக் கையெழுத்துப் போட்ட மற்றவர்களையும் தேடினார்கள். அதில் ஒருவர் பெண். அவர் இப்போது நாட்டில் இல்லை. வெளிநாடு ஒன்றுக்குச் சென்றுவிட்டார். மற்றையவர் நான் முன்னரே கூறிய இன்னொரு தமிழ்க் கட்சியின் முக்கியமான நபர். தமிழ்த் தேசிய அரசியலில் தற்போது வீசும் அலையின் முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவர்.

பொலிஸார் தேடும்போது இந்த இரண்டாவது அரசியல்வாதியும் வெளிநாட்டில் இருந்தார். தன்னையும் தேடுகிறார்கள் என்று அறிந்ததும் சட்டத்தரணி ஒருவர் மூலம் நீதிமன்றத்தில் முன்பிணை வாங்கிக்கொண்டார். அதன் பின்னர் நாட்டுக்குத் திரும்பி வந்தார்.

முன்பிணை வழங்கிய நீதிமன்றம் ஒரு நிபந்தனை விதித்திருந்தது. அவர் நாடு திரும்பியதும் அவரைப் பொலிஸார் கைது செய்யக்கூடாது, ஆனால் அவரது கடவுச்சீட்டைப்பெற்று அதனை நீதிமன்றத்திடம் ஒப்படைக்கவேண்டும். குறித்த அரசியல்வாதி அதன் பின்னர் நீதிமன்ற அனுமதியின்றி நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்பது அந்த நிபந்தனை.

இவையனைத்தும் ஏற்கனவே நடந்து முடிந்த விடயங்கள். அரசியல்வாதியின் கடவுச் சீட்டை வாங்கி நீதிமன்றத்தில் ஒப்படைத்த பொலிஸார் அதிர்ந்து போயினர். அந்தக் கடவுச்சீட்டு இலங்கையின் உயர் அதிகாரிகள் மட்டத்தில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் சலுகைக் குறிகொண்ட கடவுச்சீட்டு. அரசியல்வாதிகளுக்கு இராஜதந்திரக் கடவுச்சீட்டு வழங்கப்படுவது போன்று, அரச அலுவல்கள் நிமித்தமாக வெளிநாடுகளுக்குப் பயணிப்பதற்கான சிறப்புச் சலுகையைக் குறிக்கும் கடவுச் சீட்டு அது.

அந்தக் கடவுச்சீட்டு இந்த அரசியல்வாதியிடம் எப்படி வந்தது என்று கிளறத் தொடங்கியது பொலிஸ். இப்போது, தோண்டத் தோண்ட வந்துகொண்டே இருக்கும் புதையல் போன்று வீட்டு மோசடிக்கு உடந்தை என்பதற்கு மேலாக கடவுச்சீட்டு மோசடி தொடர்பிலும் அந்த அரசியல்வாதி மீது சட்டம் கொலை வெளியோடு பாயக்காத்திருக்கிறது.

அது என்ன விடயம் என்பதை நாளை சொல்கிறேன் வாசகர்களே! அதுவரை பொறுத்திருங்கள்.

- இடிமின்னல் -

## வடக்கு கிழக்கிலே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி சபை வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று இளங்கலைஞர் மண்டபத்தில் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது –

நாட்டின் வங்குரோத்து நிலை மேலும் வலுவடைந்தால் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அத்தியாவசிய தேவைக்குத்தன்னும் பணம் வழங்குமாறு திறைசேரிக்கு கடிதம் அனுப்பக் கூடிய நிலை இருக்குமா என்பது கேள்விக்குரியது. எனவே இப்போதும் தேர்தலை நடத்தப் பணம் இல்லை என்று கூறப்பட்டாலும்கூட மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல் நடக்கும்.

இதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வெற்றிபெற்றே ஆகவேண்டும் என்பது தேசிய மட்டத்தில் முக்கிய விடயமாக உருவெடுத்துள்ளது.

நாட்டை விட்டு ஓடிய ஜனாதிபதி சத்தம் சத்தடி இன்றித் திரும்பி வந்துள்ளார். அவரை ஒரு நாடும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவருக்கு இடம்தரத் தயாரில்லை.

இந்த நாட்டில் இரு தடவை இராணுவ ஆட்சிக்கு முயன்றும் இரு தடவை ஆயுத கிளர்ச்சிக்கு முயன்றும் முடியாத ஒரு விடயத்தை அகிம்சை வழியில் மக்கள் நிகழ்த்திக்காட்டினார்கள். அது ஆட்சி மாற்றம். அப்போது பதவி விலகல் கடிதத்தைக்கூட எழுதி வழங்க முடியாத நிலையில், நேரம் கிடைக்காத நிலையில் நாட்டின் ஜனாதிபதி தப்பியோடிய வரலாறு உண்டு. எனவே அகிம்சைக்கு அத்தனை சக்தியுண்டு.

தமிழ் அரசுக் கட்சி ஈழத்துக் காந்தியினால் தொடங்கப்பட்ட கட்சி. அதற்கும் அகிம்சை வரலாறு உண்டு. நாம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தொடர்ந்தும் அகிம்சை வழியில் போராடுவோம்.

தெற்கிலே மீண்டும் ஒரு பெரும் மாற்றம் ஏற்படும் வாய்ப்பு இருக்கின்றது. அத்தகைய மாற்றம் ஒன்று ஏற்படும் போது வடக்கு கிழக்கு மக்கள் ஓரணியில் நிற்கிறார்கள் என்ற செய்தி உறுதியாக அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். அத்தனை முக்கியத்துவம் மிக்கதாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலும் பார்க்கப்படுகின்றது – என்றார் அவர்.

## தேர்தலை நடத்தப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை பல காரணங்களைக் கூறி வந்தது. இறுதியாக பணம் இல்லை என்று கூறி வருகின்றது.

தேவையற்ற விடயங்களுக்கு அதிக பணத்தைச் செலவு செய்கின்றது அரசு. வீண் விரயம் செய்கின்றது. அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்து பணத்தை வாரி இறைக்கின்றது.

ஆனால், மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலை நடத்துவதற்கு மட்டும் பணம் இல்லையாம். அது பொய். தேர்தலை ஒத்திப்போடுவதற்காக அரசு இறுதியாகக் கையில் எடுத்திருக்கும் ஆயுதம் அது.

தேர்தலை நடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களை திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம். பணத்தை வழங்கும் வரை விடமாட்டோம் – என்றார்.

## மற்றைய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை மீறினார்கள். அதனால்தான் நானும் ஒரு தடவை அவர்களைத் தாக்கிப் பேச வேண்டி வந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

"இப்போதும் சொல்கின்றோம் கண்ணாடி வீட்டில் இருப்பவர்கள் சிந்திக்க வேண்டும். நாம் இன்னும் 10 வீதத்தைக்கூடக் கூறவில்லை முழுமையாகக் கூறினால் தாங்க முடியாது" என்றார் அவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்ட கட்சியாக இல்லாதபோது அரச தரப்பினால் பதிவு செய்யப்பட்ட கட்சியின் சின்னமான குத்துவிளக்கு இன்று கூட்டமைப்பின் பெயரிற்கு பயன்படுத்தப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## உணவு கேட்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பிக்களிடமே உணவு, பணம் ஆகியவற்றைக் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

மக்கள் எம்.பிக்களுக்குத் தொலைபேசி அழைப்புக்களை எடுத்துப் பணம் தாருங்கள், பால்மா தாருங்கள், உணவு தாருங்கள் என்று கேட்கின்றார்கள். எம்.பிக்களிடமே உதவி கேட்கும் அளவுக்கு மக்களுக்கு வேறு வழி தெரியவில்லை என்பதுதான் உண்மை.

அதுமட்டுமல்ல, மக்கள் சில எம்.பிக்களின் வீடுகளுக்குச் சென்றும் உணவு கேட்கின்றார்கள். கதவோரம் காத்துக்கிடக்கின்றார்கள் – என்றும் எதிரணி எம்.பிக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.




காலைக்கதிர் Kalaikkathir

'காலைக்கதிர்' பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

காலைக்கதிர் Kalaikkathir

# கிலோ ஒன்றுக்கு 100 ரூபாய் நெல்லுக்கு உத்தரவாத விலை

## கிளிநொச்சியில் விவசாயிகளுக்கு ரணில் உறுதியளிப்பு



பெரும்போக அறுவடை நெல்லிற்கு கிலோ ஒன்றுக்கு அரசிடம் இருந்த 100 ரூபாய் உத்தரவாத விலை கிடைக்கும் என்று கிளிநொச்சியில் ஞாயிற்றுக்கிழமை விவசாயிகளுக்கு உறுதிமொழி வழங்கினார் அரச தலைவர் ரணில் விக்கிரம சிங்க. இதற்கான உத்தரவுகளையும் அவர் உடனேயே அதிகாரிகளுக்கு விடுத்தார்.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக வெள்ளிக் கிழமை மாலை யாழ்ப்பாணம் வந்திருந்த அரச தலைவர், ஞாயிற்றுக்கிழமை தரை வழியாகக் கொழும்பு திரும்பினார். அப்போது கிளிநொச்சி, பரந்தனில் வயல் நிலங்களில் அறுவடையைப் பார்வையிட்டார். விவசாயிகளுடன் அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இலங்கைக்கு முழுமையாக நெல்லை வழங்கக்கூடியதாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் அரச தலைவர் அங்கு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பரந்தன் வயல்வெளியில் இன்று (12) நடைபெற்ற வடக்கு நெல் அறுவடை செய்யும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலின்போது அரசு உத்தரவாத விலை வழங்கி நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டும் என்று விவசாய சம்மேள னப் பிரதிநிதிகள் கோரிக்கை முன்வைத்தனர்.

அவர்களிடம் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தாவது:

விவசாயிகளுக்கு தேவையான உரத்தை எமது ஆட்சி துரிதமாக வழங்கியது. எனவே, இம்முறை பெரும்போகத்தில் மேலதிக நெல் அறுவடை கிடைக்கும் என நம்புகிறோம். ஒரு கிலோ நெல்லை 100 ரூபா உத்தரவாத விலைக்கு அர சாங்கத்தின் ஊடாக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று பலர் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர். விளைச்சல் அதிகரித்தாலும் அரிசி வாங்குவதற்கு பொருளாதார பலம் இல்லாத பிரிவினரும் நாட்டில் உள்ளனர். எனவே, மார்ச், ஏப்ரல் மாதங்களில் இருபது இலட்சம் குடும் பங்களுக்கு 10 கிலோ கிராம் அரிசியை இலவசமாக வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த இருக்கிறோம்.

சிங்கள, தமிழ் புத்தாண்டு காலப்பகுதியில் அவர்களுக்கு 20 கிலோ அரிசி கிடைத்திருக்கும். தற்போது ஒரு ஹெக்டேயருக்கு சுமார் 3 மெட்ரிக் தொன் நெல் அறுவடை கிடைக்கிறது. நாம் செயல்படுத்தி வரும் விவசாயத்தை நவீனமய மாக்கும் திட்டத்தின் மூலம் ஒரு ஹெக்டேயருக்கு குறைந்தது ஆறு மெட்ரிக் தொன் அறுவடை பெற வேண்டும். முடியுமானால், அதனை 7 மெட்ரிக் தொன் களாக உயர்த்த எதிர்பார்க்கிறோம்.

அந்த முன்னேற்றத்தை அடைய தேவையான வசதிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

நெல் கொள்முதல் செய்து சேமித்து வைக்கும் முறைகள் பின்னர் உரு வாக்கப்படும். சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலைகளை நிறுவ எதிர்பார்க்கிறோம். அடுத்த இரண்டு வருடங்களில் அந்தச் செயற்பாடுகளை நிறைவு செய்ய முடியும். இப்பகுதிக்கு தேவையான நீர் வசதிகளை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

பூநகரி ஏரியை மீளப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இரணைமடு ஏரி தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தையும் வட மாகாணத்தையும் மீண்டும் நாட்டுக்கு உணவளிக்கும் அளவுக்கு உற்பத்தி மாகாணமாக மாற்றுவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம். இதற்கு மேலதிகமாக கால்நடை தீவன உற்பத்தியை இங்கு தொடங்கவும் எதி ர்பார்க்கிறோம் என்றும் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன மற் றும் வட மாகாண அரச அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண் டனர்.

அதன் பின்னர் கிளிநொச்சி பன்னம்கட்டி கிராம வயல்வெளிக்குச் சென்ற ஜனாதிபதி அங்குள்ள விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்ததோடு அவர்களுடனும் கலந்துரையாடினார்.

பெருந்தொகையான பிரதேச மக்கள் ஜனாதிபதியை காண சுற்றிலும் கூடியிருந்ததோடு, அவர்களின் தகவல்களை கேட்டறியவும் ஜனாதிபதி மறக்க வில்லை. அங்கிருந்த சிறுபிள்ளைகள் மத்தியில் சென்று அவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பிலும் அவர் கேட்டறிந்தார்.

# மரண அறிவித்தல்



## சரவணமுத்து பாலசுப்பிரமணியம்

**மண்ணில்- 1940.10.31**
**விண்ணில் - 2023.02.12**

மாதகலைச் சேர்ந்த சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் வவுனியா, கொழும்பை வசிப்பிடமா கவும் கொண்ட சரவணமுத்து பாலசுப்பிரமணியம் அவர்கள் (2023.02.12) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான சிவகுரு, பரஞ்சோதி தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் தயாபரன் (டுபாய்) இன் அன்புத் தந்தையும், ஜயந்தியின் (கனடா) பாசமிகு மாமனாரும், திலக்ஷனின் (கனடா) அன்புப் பேரனும், காலஞ்சென்ற தணிகாசம், பரராஜசிங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நாகபூசணி மற்றும் விஜயா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள ஈசன் மலர் சாலையில் செவ் வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகளுக் காக கோம்பயன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் - குடும்பத்தினர்

தொலைபேசி இல - 077 304 4212
072 403 6422 (வட்சப்)
+971526396467

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாழ்க்கைத்திறன் பாடமாக நீச்சலை மாற்றியமையுங்கள்

**மட்டக்களப்பு, தாந்தாமலை என்ற இடத்தில் படகில் உல்லாசப் பயணம் போக முயன்ற பாடசாலை மாணவர்கள் மூவர் படகு கவிழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கின்றனர். அவர்களைக் காப்பாற்றுவதற்கு முயன்ற அவர்களின் ஆசிரியர் ஒருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கிறார்.**

**நீச்சல் தெரியாத ஒரே காரணத்தால் நால்வருமே அநியாயமாக உயிரிழந்திருக்கிறார்கள். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவில் ஒவ்வொரு வருடமும் இப்படி நீச்சல் தெரியாத காரணத்தாலேயே அநியாயமாகப் பல உயிர்கள் மடிகின்றன என்பது எவ்வளவு வெட்கக்கேடானது. மிக நீண்ட காலமாக இந்தப் பிரச்சினை இருக்கின்றபோதும் இதனைத் தீர்ப்பதற்கு மாறி மாறி அதிகாரத்துக்கு வந்த ஆட்சிகள் எவையும் நடவடிக்கை எடுக்கவில்லை.**

**ஒவ்வொரு வருடமும் சராசரியாக 755 பேர் இலங்கையில் உயிரிழக்கிறார்கள். ஒரு லட்சம் பேருக்கு 3.6 பேர் இவ்வாறு நீரில் மூழ்கியே உயிரிழக்கிறார்கள். நீரில் மூழ்கி உயிரிழக்கும் பெண்களைவிட 3.5 சதவீதம் அதிகமான ஆண்கள் நீரில் மூழ்கி உயிரிழக்கிறார்கள்.**

**ஒன்று முதல் 14 வயதுக்குட்ட குழந்தைகளின் உயிரிழப்பில் முதல் காரணமாக இருப்பது இந்த நீரில் மூழ்குவதால் ஏற்படும் சாவுகள்தான். இலங்கையின் சாராசரியுடன் ஒப்பிடும்போது 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் நீரில் மூழ்கி உயிரிழக்கும் வீதம் இன்னும் அதிகமாக இருக்கின்றனது. ஒரு லட்சம் பேருக்கு 6 முதல் 7 பேர் வரையில் இந்த வயதுப் பிரிவில் உயிரிழக்கின்றனர்.**

**எல்லாவற்றையும்விட முக்கியமானது இப்படி நீரில் மூழ்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையில் இலங்கையிலேயே வடக்கு மாகாணம்தான் முதல் இடத்தில் இருக்கின்றது.**

**கடல், ஏரி, குளம், கால்வாய்கள், கிணறுகள் என்று ஒன்று விடாமல் எல்லா நீர் நிலைகளிலும் இந்த இறப்புக்கள் சம்பவிக்கின்றன. தற்கொலைகளும் இந்தப் புள்ளிவிவரங்களில் உள்ளடங்கியுள்ளன என்றாலும் எதிர்பாராத இறப்புக்களே இவற்றில் அதிகம். இரண்டாவது இடத்தில் நீர்ப் போக்குவரத்தின்போது ஏற்படும் விபத்துக்களால் நிகழும் இறப்புக்கள். மூன்றாவது இடத்திலேயே தற்கொலைகள் இடம்பிடிக்கின்றன.**

**எல்லாப் பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவில் வாழும் மக்கள் நீந்தத் தெரியாதவர்களாக இருப்பதால் நீரில் மூழ்கி இறப்பதென்பது மிகப் பெரிய அவமானம். அதுவும் எந்தப் பக்கத்தில் பார்த்தாலும் 30 கிலோ மீற்றர்களுக்கும் அதிகமில்லாத குறுக்குவெட்டையுடைய ஒரு நிலப்பரப்புக்குள் வாழும் மக்கள் நீந்தத் தெரியாமல் உயிரிழக்கிறார்கள். இது பேரவலம் இல்லையா.**

**இந்த நிலையைத் தொடர அனுமதிக்க முடியாது; அனுமதிக்கக்கூடாது. போதைப் பொருள் பயன்பாட்டால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையைவிட ஒவ்வொரு ஆண்டும் தண்ணீரில் மூழ்கிச் சாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்போது அது பற்றிய விழிப்புணர்வு இன்றி அரசியல்வாதிகளும் இருப்பது மோசமான செல்நெறி.**

**பாடசாலைகளில் நீச்சல் பழகுவதை ஒரு வாழ்க்கைத் திறன் பாடமாகக் கட்டாயமாக்கவேண்டும் அதன் மூலமே நீரில் மூழ்குவதால் ஏற்படக்கூடிய இறப்புக்களைத் தடுக்க முடியும். கரையோரங்களில் ஆபத்துதவிகளை நிறுத்துவது, நீர்நிலைகளின் தன்மை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவது போன்ற ஏனைய வழிகளும் இருக்கின்றன என்கிறபோதும் நீச்சலை ஒவ்வொரு மாணவனுக்குமான வாழ்க்கைத் திறன் பாடமாக்கும்போதுதான் இது பெருமளவில் வெற்றியடையும்.**

**குறிப்பாக இதனைச் செயற்படுத்துவதற்கு கொழும்பின் அனுமதியை மாகாணங்கள் எதிர்பார்த்திருக்கவேண்டிய அவசியமில்லை. மாகாணப் பாடசாலைகளில் முதலில் இதனை மாகாணக் கல்வித் திணைக்களங்கள் கட்டாயமாக்கவேண்டும். புலம்பெயர் மக்களின் உதவியுடன் இதற்கான நீச்சல் கட்டமைப்புக்களை தாராளமாக உருவாக்கிக் கொள்ள முடியும். முயற்சியும் திட்டமுமே தேவையானவை. இனியாவது தமிழ் அரசியல்வாதிகளும் கல்வித்துறையினரும் இது குறித்து அக்கறை எடுக்கவேண்டும்.**

## ருகுணு பல்கலைக்கழக துணைவேந்தரை பதவி நீக்க வலியுறுத்திக் காலக்கெடு

### பல்கலை விரிவிரையாளர்கள் விதிப்பு

ருகுண பல்கலைக்கழகத் துணைவேந்தரை ஏழு நாள்களுக்குள் பதவி நீக்க வேண்டும் எனக் கோரி நாடெங்கிலும் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்வரும் 15ஆம் திகதி அடையாளப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த ருகுண பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேனவை உடனடியாகப் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்வரும் புதன்கிழமை நாடெங்கிலும் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

ருகுண பல்கலைக்கழக வெலமடம வளாகத்துக்கு முன்னால் அன்றையதினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளால் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. ஏழு நாள்களுக்குள் துணைவேந்தரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என ஜனாதிபதிக்கு நிபந்தனைக் கடிதமொன்றும் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறி கடந்த 5ஆம் திகதி தனது அலுவலகத்துக்குச் சென்ற சமயம், அவரது அறையிலிருந்து வழக்கத்துக்கு மாறான மணம் வந்ததாகவும், அது அவரைக் கொலை செய்யும் வகையில் பரவ விடப்பட்ட நச்சு வாயுக் கசிவு என்றும் துணைவேந்தருக்கு எதிரான குற்றச்சாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழர்களின் வீடுகளை எரித்தவர்களே என்னை வீட்டுக்கு அனுப்ப பார்க்கிறார்கள்

### ருகுணு பல்கலை துணைவேந்தர் குற்றச்சாட்டு

1983ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின்போது, ஜே.வி.பிக்காகத் தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் எரித்த ஒரு பேராசிரியரே இன்று என்னை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்கிறார். அவர்கள் பல்கலைக் கழகத்தை வைத்து அரசியல் செய்யப் பார்க்கிறார்கள். வீடற்ற தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டு அரசியல் செய்யட்டும் என்று ருகுண பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ருகுணு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேன தெரிவித்தார். இது தொடர்பில் பகிரங்க அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவையனைத்தும் தன்னைப் பதவி நீக்கம் செய்வதற்காக வேண்டுமென்றே சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்று குறிப்பிட்டுள்ள துணைவேந்தர், தனக்கெதிரான சதியில் முன்னிற்போருக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுகளையும் முன்வைத்துள்ளார்.

இதேநேரம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தான் மறுப்பதாகத் தெரிவித்துள்ள துணைவேந்தர், மேலும் குறிப்பிடுகையில் றொகான் லக்சிறி, பேராசிரியர் நிரமல் ரஞ்சித் தேவசிறி மற்றும் பேராசிரியர் உப்புல் அபேரத்ன ஆகியோர் அரசியல் காரணங்களுக்காகவே என்னைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு பாடுபடுகிறார்கள்.

நான் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு இரண்டாவது தடவையாகத் திறமை அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டவன். அரசியல் செல்வாக்கினால் பதவியைப் பெற்றவன் நானல்ன். இங்கு கலாநிதிப் பட்டத்துக்காக நிதியைப் பெற்றுவிட்டு 13 வருடங்களுக்கு மேல் பணத்தை மீள்ளிக்காமல் இருப்பவர்களும், ஆராய்ச்சி ஒதுக்கீடுகள் மற்றும் பரீட்சைகளில் மோசடி செய்வோருமே எனக்கு எதிராக என்னைப் பதவி நீக்கம் செய்யத் துடிக்கிறார்கள்.

1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் போது, ஜே. வி. பிக்காகத் தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் எரித்த ஒரு பேராசிரியரே இன்று என்னை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்கிறார். அவர்கள் பல்கலைக் கழகத்தை வைத்து அரசியல் செய்யப் பார்க்கிறார்கள். வீடற்ற தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டு அரசியல் செய்யட்டும் என்று பகிரங்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மட்டு. படகு விபத்தில் இறந்த 4 பேரினது சடலங்களும் மீட்பு

(பழுவூரான்)

மட்டக்களப்பில் பாடசாலை மாணவர்கள் பயணித்த படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஆசிரியரும் மூன்று மாணவர்களும் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழுந்தனர்.

மட்டக்களப்பு – கொக்கட்டிச்சோலை – தாந்தாமலை பகுதியில் உள்ள மீனச்சிம்பேடி குளத்தில் படகுப் பயணம் செய்தபோதே இந்த விபத்து நிகழ்ந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

களுமுந்தன் வெளியைச் சேர்ந்த ஆசிரியர் யோகேஸ்வரன் கிவேந்தன் (வயது 27) மாணவர்களான தயாபரன் ரஜிர்த்தனன் (வயது 16), சத்தியசீலன் தனுஜன் (வயது 18), வீரசிங்கம் விதுசன் (வயது 16) ஆகியோரே விபத்தில் உயிரிழந்தனர்.

களுமுந்தன் வெளி அரச தமிழ் கலவன் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்விகற்றுவரும் 11 மாணவர்களும் (4 ஆண்கள், 7 பெண்கள்) பெண் 3 ஆசியரியர்களும் தாந்தாமலைப் பகுதிக்குச் சுற்றுலா சென்றுள்ளனர்.

படகில் பயணிக்க விரும்பிய மாணவர்



கள் குளத்தில் படகு ஒன்றில் செல்ல முற்பட்ட போது அது கவிழ்ந்து நீரில் மூழ்கினர். அவர்கள் ஆபத்தில் சிக்கிக்கொண்டதைப் பார்த்த ஆசிரியர் அவர்களைக் காப்பாற்றுவதற்காக நீரில் குதித்துள்ளார். பின்னர் நான்கு பேரும் காணாமற்போயினர்.

சுழியோடிகள் வரவழைக்கப்பட்டு நான்கு பேரின் சடலங்களும் குளத்திலிருந்து மீட்கப்பட்டன. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சம்பவ இடத்திற்கு வந்து சடலங்களைப் பார்வையிட்டதுடன் அவற்றை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கவும் உத்தரவிட்டார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை உறுதி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வென்னப்புவையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள், குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள் மற்றும் பாரிய அழிவுக்கு உள்ளான மக்களுக்கு நீதி வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார். எனினும், அந்த வாக்குறுதி அவரால் நிறைவேற்றப்படவில்லை.

கட்டடங்கள் கட்டப்பட்டாலும், ஒப்பிட முடியாத மதிப்புள்ள மனித வாழ்க்கையை மீட்டெடுக்க முடியாது.

தாக்குதலின் பின்னர் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு தலைவர்களும் நீதி வழங்கப்படுவதாகப் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றினர்.

பயங்கரவாதத் தாக்குதலொன்றில் தந்தையை இழந்த ஓர் மகன் என்ற வகையில், பயங்கரவாதத் தாக்குதலின் கொடூரத்தையும் நன்கு அறிந்திருப்பதால், உயிர்த்த



ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து வெளிப்படைத்தன்மையுடன் கூடிய தேசிய மற்றும் சர்வதேச அளவில் விரிவான விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்.

அதுமட்டுமின்றி, இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காத வகையில் சட்டம், ஒழுங்கைப் பலப்படுத்த வேண்டும்

பயங்கரவாதத்தைச் செயற்படுத்தி அப்பாவி உயிர்களை அழிக்கும் நபர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் - என்றார்.

## புலத்சிங்களவில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது!

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவரை பொலிஸார் சனிக்கிழமை இரவு புலத்சிங்கள பகுதியில் கைதுசெய்துள்ளனர்.

புலத்சிங்கள பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், வீடொன்றை சுற்றிவளைத்தபோதே, அந்த வீட்டிலிருந்த குறித்த பெண்ணை 10 கிராம் ஹெரோயினுடன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்கள் எனவும், அவர்கள் புலத்சிங்கள பிரதேசம் முழுவதும் ஹெரோயின் விநியோகத்தில் ஈடுபட்டு வருபவர்கள் எனவும் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரின் கணவர், தந்தை மற்றும் அந்த வீட்டைச் சேர்ந்த சிலர் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




## அறுவைச் சிகிச்சைகளில் அவசரமற்றவை தாமதமாகும்

### மருந்துத் தட்டுப்பாட்டால் சுகாதார அமைச்சு முடிவு

அரசாங்க வைத்தியசாலைகளில் அவசரமற்ற சத்திர சிகிச்சைகளை தாமதப்படுத்த சுகாதார அமைச்சால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அத்தியாவசிய மற்றும் அவசர சத்திரசிகிச்சைகள் வழமை போன்று மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துகள் மற்றும் உபகரணங்கள் தட்டுப்பாடு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் அவசர சத்திரசிகிச்சைகளுக்கு முன்னுரிமை வழங்குமாறும் வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

## டெங்கு தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

இந்த வருடத்தில் இலங்கையில் 7 ஆயிரத்து 647 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தொற்றுநோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தரவுகளின்படி, ஜனவரி மாதத்தில் 6 ஆயிரத்து 497 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும், இந்த மாதத்தில் ஏற்கனவே 1,150 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த மாதம் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இருந்து தலா 1,000 மேற்பட்ட தொற்றாளர்கள் பதிவாகினர்.

மேலும் இந்த மாதத்தில் இதுவரை கொழும்பு மாவட்டத்தில் 218 டெங்கு நோயாளர்களும், புத்தளத்தில் 172 தொற்றாளர்களும் மற்றும் கம்பஹா மாவட்டத்தில் தொற்றாளர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதிகளவான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளதாக தொற்றுநோயியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## விசேட அதிரடிப் படையினரால் மாகந்துர மதுஷின் சகா கைது!

பெருமளவு போதைப்பொருள் கடத்தல்காரரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியுமான மாகந்துர மதுஷின் சகா ஒருவரை நவகமுவ பிரதேசத்தில் வைத்து, கேரள கஞ்சாவுடன் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர் மதுஷுடன் டுபாயில் முன்னர் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர் எனவும் விசேட அதிரடிப் படையினர் தெரிவிக்கின்றனர்.

சிறிய லொறியில் தேங்காய் விற்பனை என்ற போர்வையில் வட பகுதிக்குச் சென்ற சந்தேகநபர், அங்கு கேரள கஞ்சாவை மொத்தமாக விலைக்கு வாங்கி, கொழும்பில் விற்பனை செய்து வந்துள்ளார் என விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய, நவகமுவ பிரதேசத்தில் வைத்து சனிக்கிழமை இரவு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## உ. கிழங்கு அறுவடையில் விவசாய அமைச்சு கவனம்

விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில், உள்ளூர் உருளைக்கிழங்கு அறுவடையில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஆகவே வெளிநாடுகளில் இருந்து உருளைக்கிழங்கு இறக்குமதியைத் தடுக்கும் வேலைத் திட்டத்தை விவசாய அமைச்சு ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

தடைக்கு பதிலாக இறக்குமதிசெய்யப்படும் உருளைக்கிழங்குக்கு வரி விதிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

மேலும் இன்று நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் உள்ளூர் விவசாயிகள் தொடர்பில் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# பெரமுனவை பலவீனப்படுத்துகிறார் ரணில்

## விமல் வீரவன்ஸவின் கண்டுபிடிப்பு இது



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்துகிறார். ஐக்கிய தேசிய கட்சியை தஞ்சமடையச் செய்யும் நிலை அந்தக் கட்சிக்கு ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கடுவெல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற சுதந்திர மக்கள் சபை கூட்டணியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் பிற்போடப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொதுஜன பெரமுனவுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார். ஆனால், தேர்தலை பிற்போடும் நோக்கம் ஜனாதிபதிக்குக் கிடையாது. மாறாக, தேர்தலை பிற்போடுவதாக குறிப்பிட்டுக்கொண்டு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை பலவீனப்படுத்துகிறார்.

இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன படுதோல்வி அடையும். பழில் ராஜபக்ஷவின் படுதோல்வியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலுக்கு நிதி ஒதுக்கினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையும் என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் 40 கோடி ரூபா செலவு செய்து 75ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட முடியுமாயின், ஏன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாது – என்றார்.

# துருக்கி நிலநடுக்கத்தில் இலங்கைப் பெண் சாவு

## இடிபாடுகளிலிருந்து சடலம் மீட்பு

துருக்கியில் ஏற்பட்ட வரலாற்றின் மிகப்பெரும் நிலநடுக்கத்தில் சிக்கி இலங்கைப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் இதனை உறுதிப்படுத்தியது.

உயிரிழந்தவர் 64 வயதுடைய சந்திரிகா ராஜபக்ஷ எனவும், இவர் கலகெதரவை சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் மகளே தனது தாயை அடையாளம் கண்டுள்ளார் எனவும் துருக்கிக்கான இலங்கைத் தூதுவர் ஹசந்தி திஸாநாயக்க இன்று சனிக்கிழமை தெரிவித்தார்.

இடிந்து வீழ்ந்த கட்டடத்தின் இடிபாடுகளுக்குள் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட போதே குறித்த பெண்ணின் சடலமும் கண்டெடுக்கப்பட்டது.

தூதரகத்தின் கூற்றுப்படி, அந்தப் பெண் துருக்கியில் பல ஆண்டுகளாக வசித்து வந்துள்ளார், அவர் துருக்கிய குடிமகன் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதியவரின் சடலம் மீட்பு!

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாகத் தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பகுதியில் வசித்து வந்த எம்.ஜி.பிரேமதாஸ (வயது 71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் தலவாக்கலை ஹொலிரூட் பகுதியிலுள்ள தனது உறவினர் வீட்டிற்கு வந்துள்ள நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தலவாக்கலைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மேலும் 2 லட்சம் பேருக்கு மே மாதம் வரை நிதிஉதவி

## உலக உணவுத் திட்டம் வழங்கும்

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள 2 லட்சத்து 44 ஆயிரம் பேருக்கு பெப்ரவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப்பகுதியில் அவசியமான நிதி உதவிகளை வழங்கவுள்ளதாக உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

பொருளாதாரம் நெருக்கடியால் உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது. ஐ.நா. உள்ளிட்ட அவர்களுக்கு பன்னாட்டு அமைப்புக்கள் உதவிகளை வழங்கி வருகின்றன. உலக உணவுத் திட்டமும் அந்த அமைப்புகளில் ஒன்று.

இலங்கையில் 37 சதவீதமானோர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டுள்ளனர். 2022 ஜூன் மாதம் உலக உணவுத் திட்டத்தின் அவசர உதவி வழங்கல் செயற்றிட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து தற்போது வரை சுமார் 1.8 மில்லியன் மக்களுக்கு அவசியமான உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, உலக உணவுத் திட்டத்தினால் 7 ஆயிரத்து 593 பாடசாலைகளுக்கு பகலுணவுக்காக 1470 மெட்ரிக் தொன் அரிசியை வழங்கியுள்ளது. அதன் மூலம் சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமான (1,050,714 மாணவர்கள்) பாடசாலை மாணவர்கள் பயனடைந்திருக்கின்றார்கள். அதேபோன்று உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்பட்ட சோளம் மற்றும் சோயா உள்ளிட்ட மூலப்பொருட்களை பயன்படுத்தி ஒரு மில்லியனுக்கும் அதிகமான திரிபோஷைக்கற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மேலும், உணவுப் பாதுகாப்பின்மை நெருக்கடி உயர்வாக உள்ள பகுதிகளில் வாழும் 2 லட்சத்து 85 ஆயிரத்து 776 பேருக்கு அவசியமான உணவுப்பொருட்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும் 700,000 பேருக்கு எதிர்வரும் மாதங்களில் அவ்வுதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்தோடு இவ்வருடம் பெப்ரவரி முதல் மே மாதம் வரையான காலப்பகுதியில் 244,000 பேருக்கு அவசியமான நிதியுதவிகளை வழங்குவதற்கும் உலக உணவுத் திட்டம் தீர்மானித்திருப்பதுடன் ஏற்கனவே 489,000 பேருக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கு உதவுவதற்கென இதுவரையான காலப்பகுதியில் அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், நியூஸிலாந்து, நோர்வே, சுவிற்ஸர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிடமிருந்து உலக உணவுத் திட்டத்துக்கு 47.5 மில்லியன் டொலர் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது என்று அதன் அறிக்கை கூறுகின்றது.

# உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி மேலும் உடையும் சுதந்திரக் கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒட்டி இரண்டாக உடையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று உட்கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் 95 ஆசனங்களைப் பெற்றிருந்த சு.க. 2020 நாடாளுமன்றத் தேர்தலில் 14 ஆசனங்களை மாத்திரமே பெற்றன. அவர்களுள் 9 பேர் ரணில் ஜனாதிபதியானதும் ரணிலின் அரசில் இணைந்துகொண்டனர். 5 எம்.பிக்களே எஞ்சியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின் போது கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அந்த 5 எம்.பிக்கள் இரண்டாகப் பிரியும் நிலை ஏற்பட்டுள்ளது என்று உட்கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

மூன்று எம்.பிக்கள் ஒரு பக்கமும், இரண்டு எம்.பிக்கள் இன்னொரு பக்கமும் செல்வதற்கு வாய்ப்புண்டு என்று சொல்லப்படுகின்றது.

# தொழிலை இராஜினாமா செய்யாது வேட்புமனு தாக்கல் செய்த அதிபர் பணி இடைநிறுத்தம்!

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி அநுராதபுரம் மாநகர சபைக்கு போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ள அநுராதபுரம் நகரிலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவருக்கு பணிபுரிய வடமத்திய மாகாண கல்வி திணைக்களம் தடை விதித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை சமர்ப்பித்தமைக்காக மேற்படி அதிபர் தனது பதவியை இராஜினாமா செய்யாமை காரணமாகவே அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாட்டை ஆராய்ந்த வடமத்திய மாகாண கல்வி திணைக்களம், குறித்த அதிபரின் சேவையை உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இடைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

தேர்தல் சட்டத்தின்படி, அரச துறையில் பணியாளர் தரநிலையில் கடமையாற்றும் அதிகாரி ஒருவர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டால், அவர் வேட்புமனுவைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிவனொளிபாதமலை ஏறிய கர்ப்பிணி இடைவழியில் குழந்தை பிரசவிப்பு!

இரத்தினபுரி பகுதியில் இருந்து சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய சென்ற கர்ப்பிணிப் பெண்ணொருவர் மலை ஏறிக்கொண்டிருந்தபோது நடுவழியே குழந்தை பிரசவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

நல்லதண்ணி நகரில் இருந்து சிவனொளிபாத மலைக்கு 32 வயதுடைய உடுவர ஆராச்சிகே நிறூஷா தினூ என்ற கர்ப்பிணிப் பெண் தரிசனம் செய்வதற்காக சென்றுள்ளார்.

மலை ஏறிக்கொண்டிருந்த வேளையில் ஊசிமலைப் பகுதியில் வைத்து அந்த பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்த இடத்திலேயே குழந்தை ஒன்றை பிரசவித்துள்ளார்.

அதனையடுத்து அவரது குடும்பத்தினர் அங்கிருந்து அவசர அவசரமாக நல்லதண்ணி பொலிஸாரின் உதவியுடன் 1990 அவசர அம்புலன்ஸ் மூலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு தாயையும் குழந்தையையும் கொண்டு சென்றுள்ளனர்.

அதன் பின்னர் வைத்தியசாலையில் குழந்தையோடு சேர்க்கப்பட்டுள்ள பெண், தற்போது அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

இது தொடர்பில் கிளங்கன் ஆதார வைத்தியசாலை மருத்துவரிடம் கேட்டபோது, சுகப்பிரசவத்தில் பிறந்த குழந்தையும் அதன் தாயும் நலமாக இருக்கின்றனர் எனவும், பிறந்திருப்பது பெண் குழந்தை எனவும் தெரிவித்துள்ளார்.

# நகர்களில் போக்குவரத்து நெரிசல் குறைய மனித உரிமைகள் ஆணைக்குழு பரிந்துரை

## விரைவில் அரசிடம் வழங்கும்

கொழும்பு, பெப். 13

கொழும்பு உட்பட நாட்டின் முக்கிய நகரங்களில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான வழிவகைகள் குறித்த பரிந்துரைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கவுள்ளது.

வாகன விபத்துக்களால் ஏற்படும் உயிர்ச்சேதம் மற்றும் வீதிகளில் நேர விரயம் என்பவற்றைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்தது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையில் அண்மையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை, போக்குவரத்து திணைக்களம், கொழும்பு வீதிப் போக்குவரத்து அதிகார சபை, பொலிஸ் போக்குவரத்து பிரிவு உள்ளிட்ட பல திணைக்களங்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தன.

இந்தப் பிரச்சினை குறித்து அரசுக்குப் பரிந்துரைகளைத் தர இருப்பதால் விவாதத்தில் பங்கேற்ற அதிகாரிகளை ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை தரும்படி ஆணைக்குழு கேட்டுள்ளது.



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## இளம் சந்ததியினரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி சபை வேட்பாளர் அறிமுகக் கூட்டம் இன்று இளங்கலைஞர் மண்டபத்தில் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்றது.

இங்கு உரையாற்றிய தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தெரிவித்ததாவது –

உள்ளூராட்சி சபைக்காக 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் பெற்ற அனுபவத்தின் மூலம் தனித்து போட்டியிடவேண்டும் என்ற தீர்மானத்திற்கமையவே இம்முறை தமிழ் அரசுக் கட்சி தனித்து போட்டியிடுகின்றது. இதேநேரம் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாக இருப்போர் வேறாக போட்டியிடும் நிலையில் நிச்சயமாக இந்த புதிய உத்தியில் பெரும்பான்மையைப் பெற முடியும்.

இந்த முடிவு தொடர்பிலும் சிலரிடம் மாறுபட்ட கருத்து இருக்கலாம் ஆனால் இதன் நன்மை, தீமையை வாக்களிப்பின் பின்பே தெரியவரும் என்றார்.

இக் கலந்துரையாடலில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிரேஸ்ட தலைவர் சீ.வி.கே.சிவஞானம் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள், வேட்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## நாட்டில் ஏற்பட்டுள்ள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்,

தற்போதைய நெருக்கடியை வல்லுநர்கள் பல நெருக்கடியாக அடையாளப்படுத்துகின்றனர்.

இது திவாலான பொருளாதாரங்களுக்கு தீர்வு காணாத மற்றும் பிற நாடுகளில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நாடுகளுடன் தொடர்புடையது.

விநியோக உந்துதல் பணவீக்கம் காரணமாக உணவு மற்றும் எரிசக்தி விலைகள் அதிகரிக்கும் அதேவேளையில் வட்டி விகிதமும் அதிகரிக்கின்றது.

நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் சூழல் மாற்றங்களை அரசு கருத்தில் கொள்ளத் தவறியுள்ளது.

நெருக்கடி காலங்களில் நிலைத்தன்மையை உருவாக்குவதே நிர்வாகத்தின் வழியாக இருக்க வேண்டும். அரசு பொருளாதாரத்தை தன்னிச்சையாக நிர்வகிக்கின்றது.

ஒரு நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும். அதேவேளை, ஜனநாயகம் நிலவுவதை உறுதி செய்வதற்கு உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

**Jaffna College Institute of Technology**

**பின்வரும் பாடநெறிகள் Feb. மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

**1. Computer Certificate Courses ( 3 – 4 months Part time)**
- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**2. Civil Draftsperson ( one year )**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
Course leads to:
*Follow courses in level 5

**3. FIT - pre degree Programme for University of Colombo IT degree.**
Qualification GCE(O/L)

**4. Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)**
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator
- மின்னியலாளர் (Certificate in Electrician)- NVQ பாடத்திட்டத்தை தழுவியது

Our Civil Draftsperson & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Library & Sports
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai. Tel. no: 0212250975 / 0212223382.**



**நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.**

பக்கங்கள்: 08


# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 29 ஞாயிற்றுக்கிழமை 12.02.2023 கதிர் 347

### யாழ். நிகழ்வுகளுக்கு

## பிரதமர் ஏன் வரவில்லை?



யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடன் நேற்று இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்து 2

# இங்கு நிறைவேற்றவே முடியாத 'சமஷ்டி' தீர்வைக் கேட்காதீர்கள்!

### தமிழ்த் தலைவர்களிடம் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார வேண்டுகோள்



**தயவுசெய்து சமஷ்டி தீர்வைக் கேட்க வேண்டாம் என்று தமிழ்த் தலைவர்களிடம் சொல்கின்றோம். சமஷ்டிக்கு நாம் கடும் எதிர்ப்பு. ஒருபோதும் சமஷ்டி தீர்வை நிறைவேற்றவே முடியாது.**

**-இவ்வாறு இராஜாங்க அமைச்சர் கே.டபிள்யூ. சாந்த பண்டார தெரிவித்தார்.**

**அவர் மேலும் கூறுகையில்,**

**வடக்கு - கிழக்குதமிழ் மக்கள் அன்றிருந்து இன்று வரை கேட்பது அரசியல் தீர்வைத்தான். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்குச் செல்கின்ற போது தமிழ் மக்கள் அரசியல் தீர்வு கோரி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.** 2

## சீனா இலங்கையின் நண்பன்

### இந்தியாவில் அலி சப்ரி தெரிவிப்பு



சீனா இலங்கையின் நண்பன் என்றும், இரு நாடுகளும் தொடர்ந்து கைகோர்த்துச் செயற்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

எவ்வாறாயினும்,இந்தியா கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்றும், இந்திய நலன்களை எந்தக் கட்டத்திலும் தீவு தேசம் குறைமதிப்புக்கு உட்படுத்த அனுமதிக்காது என்றும் சப்ரி கூறினார்.

இலங்கையின் வலுவான உறவு அதன் நாகரிகத்தின் ஒரு பகுதியாகும் என்றும், இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்தவொரு செயலையும் அதன் மண்ணில் நடக்க அனுமதிக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கேரள மாநிலம் கொச்சியில் ஒரு தனியார் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அலி சப்ரி இவ்வாறு கூறினார். இமயமலைப் பகுதியில் நிலவும் மோதல்களால் சீன – இந்திய உறவில் பதற்றம் நிலவி வரும் நேரத்தில் அவரது கருத்துக்கள் வந்துள்ளன.

அவர் மேலும் கூறுகையில்,

இந்தியா கவலைப்படத் தேவையில்லை. இந்தியாவுடனான இலங்கை உறவு மிகவும் வலுவானது, அது நாகரிகத்தின் ஒரு பகுதி. இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எதையும் எங்கள் பிராந்தியத்தில் அனுமதிக்க மாட்டோம். சீனாவும் நமது நண்பன், 2

## சஜித்தின் மேடையில் 25 பேராசிரியர்கள்

### தெற்கு அரசியல் களத்தில் பரபரப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் ஒரே மேசையில் 25 பேராசிரியர்கள் அமர்ந்தனர். அப்படியென்றால் சஜித் எப்படிப்பட்ட ஆட்சி ஒன்றுக்குத் தயாராகின்றார் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

–இவ்வாறு தெற்கு வார இதழ் ஒன்றின் அரசியல் அரங்கப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:–

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் குருநாகலில்தான் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதில் கவனிக்கத்தக்க முக்கிய அம்சம் ஒன்று இருந்தது. அதுதான் 25 பேராசிரியர்கள் அந்த மேடையில் அமர்ந்திருந்தமை.

அப்படியென்றால் சஜித் எப்படிப்பட்ட ஆட்சி ஒன்றுக்குத் தயாராகின்றார் என்பதைப் புரிந்து கொள்ளலாம் – என்றுள்ளது.

## ரயில் - கார் விபத்தில் ஒருவர் பலி

### மூவர் படுகாயம்

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில், கெலிஓயா கரமட பிரதேசத்தில் கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் பலியாகியுள்ளார். அத்துடன், மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2

## படகு கவிழ்ந்து நால்வர் மரணம்

### மட்டக்களப்பில் சோகம்

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, தாந்தாமலைப் பகுதியில் இன்று படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

27 வயதுடைய ஆசிரியர் மற்றும் 16 வயதுடைய மூன்று பாடசாலை மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழில் சுதந்திர தினத்தையொட்டிய கலாசார விழா

### படங்களை வெளியிட்டது ஜனாதிபதி ஊடகப் பிரிவு

இலங்கையின் 75ஆவது தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு , மாபெரும் இசைக் கச்சேரியுடன் கூடிய 'யாழ்ப்பாணம் மாவட்ட கலாசார விழா' நேற்றிரவு யாழ். கோட்டைக்கு அருகிலுள்ள முற்றவெளி திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

வடக்கு மாகாண தமிழ் கலா சாரத்தைப் பறைசாற்றும் வகையில் கலாசார விழாவில் பல அம்சங்கள் சேர்க்கப்பட்டிருந்ததோடு, இறுதியில் மாபெரும் இசைக் கச்சேரியும் நடைபெற்றது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு படங்களுடன் 2





## இங்கு நிறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், ஒற்றையாட்சிக்குள் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது என்றும், நாட்டைப் பிரிப்பதற்கு இடமளிக்கமாட்டாது என்றும் ஜனாதிபதி கூறி வருகின்ற போதிலும் சிலர் ஜனாதிபதிக்கு எதிராக – அரசியல் தீர்வுக்கு எதிராகப் பேசி வருகின்றனர்.

## யாழ். முற்றவெளி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர் என்றும், இசை நிகழ்ச்சியில் தென்னிந்திய கலைஞர்கள் பலர் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்திய மத்திய மீன்பிடித்துறை துணை அமைச்சர் எல். முருகன், இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகள், பாதுகாப்புப் பிரதானிகள் உள்ளிட்ட முக்கிய விருந்தினர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று மாலை யாழ். கலாசார நிலையத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் சுதந்திர தின ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த பல்வேறு நடன அம்சங்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் வடக்கு மாகாண பாடசாலை மாணவ மாணவிகளும் இதில் கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தலைவர்களிடம் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றோம். தயவு செய்து சமஷ்டி தீர்வைக் கேட்க வேண்டாம். சமஷ்டிக்கு நாம் கடும் எதிப்பு. ஒருபோதும் சமஷ்டி தீர்வை நிறைவேற்றவே முடியாது.

தமிழ்த் தலைவர்கள் சிலர் உண்மையில் தீர்வை விரும்பவில்லை. தீர்வு கிடைத்துவிட்டால் அவர்களால் அரசியல் செய்ய முடியாது. இதனால்தான் அவர்கள் வழங்கப்பட முடியாத சமஷ்டி தீர்வைக் கேட்கின்றனர்.

நாம் ஒற்றையாட்சிக்குள் தீர்வை வழங்கத் தயார். அரசு தேர்தலை ஒத்திப்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

பொருளாதாரப் பிரச்சினை என்று வரும் போது அது இந்த நாட்டுக்கு மட்டும் உரியது அல்ல. முழு நாட்டிலும் உள்ளது. இங்கிலாந்தில் கூட இப்போது வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துள்ளது.

இப்போது எமது நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை கொஞ்சம் கொஞ்சமாக தீர்ந்து கொண்டு வருகின்றது. இந்த வருட இறுதிக்குள் நாம் ஒரு நல்ல நிலைக்கு வந்துவிடுவோம். மக்கள் அனைவரும் எமது இந்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – என்றார்.

## பிரதமர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ளவில்லை. பிரதமரின் பங்கேற்புடனேயே யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி கலந்து கொள்ளும் அனைத்து நிகழ்வுகளும் இடம் பெறும் என்று அழைப்பிதழ்களில் குறிப்பிட்டிருந்தாலும் அவர் கலந்துகொள்ளவில்லை.

பொதுவில் ஜனாதிபதி கலந்துகொள்ளும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில் மாத்திரமே பிரதமர் பங்கேற்பார் என்றும், ஏனைய நிகழ்வுகளில் அவர் ஜனாதிபதியுடன் கலந்துகொள்வதில்லை என்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

## சீனா இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாம் அவர்களைச் சமாளித்து அவர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். ஆனால், இந்திய நலன்கள் பாதிக்கப்படாது. இந்திய அரசிடம் மிகத் தெளிவாகக் கூறியுள்ளோம் – என்றார்.

## ரணில்-கார்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று மாலை இடம் பெற்ற மேற்படி விபத்தின்போது பிலியந்தளையைச் சேர்ந்த பியூமிகா ஜனனி டயஸ் 61 வயது பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து, கெலிஓய பிரதேசத்திலுள்ள உறவினர்கள் வீட்டுக்கு காரில் பயணித்த குடும்பத்தினரே விபத்தில் சிக்கியுள்ளனர்

குறித்த கார் கெலிஓய நகரில் இருந்து உறவினர்கள் வீடு அமைந்துள்ள கரமட பிரதேசத்துக்குக் குறுக்கு வழியால் செல்ல முற்பட்ட சமயமே ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## படகு கவிழ்ந்து......

4 மாணவர்கள், 7 மாணவிகள் மற்றும் 3 ஆசிரியர்கள் பயணித்த படகு கவிழ்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அதில் நான்கு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள நிலையில் ஏனையோர் உயிர்பிழைத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## தலைக்கேறும் விசம்!

பாம்பு கொத்தினால் விசம் தலைக்கேறும் என்பார்கள். அதுபோன்று அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துகின்றேன் என்று நாட்டின் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்து, பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் காலில் கொத்திய விசம். இப்போது அது தலையை நோக்கி விர் விர் என்று ஏறிக்கொண்டிருக்கின்றது.

முதலில் அதற்கு கடும்போக்குவாதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள் சரத் வீரசேகர, விமர் வீரவன்ஸ், உதய கம்பன்பில போன்றோர் எதிர்ப்புக் காட்டத் தொடங்கினர். பின்னர் அடுத்த கட்டமாக பிக்குகள் எதிர்ப்பை வெளிப்படுத்தத்தொடங்கினர். அரசமைப்பின் 13ஆவது பிரதியையும் தீயிட்டு எரித்தனர். அதைத் தொடர்ந்து பிக்குகள் எதிர்க்கும் எதையும் இங்கு செய்ய முடியாது என்று முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இப்போது அரசின் இராஜாங்க அமைச்சர் ஒருவர் இணைப்பாட்சி அல்லது கூட்டாட்சி எனப்படும் சமஷ்டியைக் கேட்காதீர்கள் என்கிறார்.

“வடக்கு – கிழக்குதமிழ் மக்கள் அன்றிருந்து இன்று வரை கேட்பது அரசியல் தீர்வைத்தான். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்குக்குச் செல்கின்ற போது தமிழ் மக்கள் அரசியல் தீர்வு கோரி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், ஒற்றையாட்சிக்குள் அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது என்றும், நாட்டைப் பிரிப்பதற்கு இடமளிக்கமாட்டாது என்றும் ஜனாதிபதி கூறி வருகின்ற போதிலும் சிலர் ஜனாதிபதிக்கு எதிராக – அரசியல் தீர்வுக்கு எதிராகப் பேசி வருகின்றனர்.

தமிழ்த் தலைவர்களிடம் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றோம். தயவு செய்து சமஷ்டி தீர்வைக் கேட்க வேண்டாம். சமஷ்டிக்கு நாம் கடும் எதிப்பு. ஒருபோதும் சமஷ்டித் தீர்வை நிறைவேற்றவே முடியாது” என்று இராஜாங்க அமைச்சர் கே.டபிள்யூ.சாந்த பண்டார தெரிவிக்கிறார்.

இவர் மகிந்தவின் பொது ஜன பெரமுன கட்சியைச் சேர்ந்தவர்.

இப்போது விசம் கழுத்துவரை ஏறியிருக்கிறது. இன்னும் கொஞ்ச நாளில் அது தலைக்கு ஏறி, அதிகாரப் பகிர்வுக்குச் சாவு மணி அடிக்கும். தற்றுணிபில்லாத, தூர நோக்கற்ற, இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் தலைவணங்குகின்ற தலைவர்கள் இருக்கும் வரை இந்தச் சாவு மணி திரும்பத் திரும்ப அடிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜனாதிபதி தமக்கான மக்களாணையை பரிசீலிக்கலாம்!

## அநுரகுமார சவால்



உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடவடிக் கைகளுக்கு அரசாங்கம் நிதி ஒதுக்காவிட்டால் நாட்டு மக்களை ஒன்றிணைத்து அரசாங் கத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுவோம்.

தமக்கான மக்களாணை எந்தளவில் உள்ளது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஊடாக பரிசீலித்துக் கொள்ள வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரி வித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற தொழிற்துறை தரப்பினருடனான சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

அரச வருமானத்தை குறுகிய காலத்தில் அகரித்துக் கொள்ள அரசாங்கம் நியாய மற்றவகையில்வரிகொள்கையால் சிறு மற் றும் நடுத்தர தொழிற்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. மூலப்பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதால் பெரும்பாலான தொழிற்துறையினர் உற்பத்தி நடவடிக்கையில் இருந்து விலகியுள்ளார்கள்.


வீழ்ச்சியடைந்துள்ள சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையை மீள்கட்டியெழுப்பும் திட்டங்களை ஜனாதிபதி தனது கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடவில்லை.

பிரபல்யமடையும் தீர்மானங்களை எடுக்கப்போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டார், அவரால் பிரபல்யமடையும் தீர்மானங்களை எடுக்க முடியாது, ஏனெனில் அவர் மக்கள் பிரநிதியல்லர், ராஜபக்ஷர்களின் பிரதிநிதி.

பொருளாதாரப் பாதிப்புக்கு அரசியல் மாற் றத்தின் ஊடாகத்தீர்வு காண முடியாது என ஆளும் தரப்பினர் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது, தமக்கான அரசாங்கத்தை நாட்டு மக்கள் தெரிவு செய்தால் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்மானத்தை மதிக்கிறோம். ராஜபக்ஷர்கள் தாம் வெற்றிபெறும் போது தேர்தலை நடத்துவார்கள். தோல்வியடையும் சூழல் காணப்படுமாயின் தேர்தலை நடத்தாமல் பிற்போடுவார்கள். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக் கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன் வைக்க திறைசேரி இதுவரைநிதிஒதுக்கவில்லை. நிதி வழங்காவிடின் நாட்டு மக்களை ஒன்றிணைத்து அரசாங்கத்துக்கு எதிராகப் பாரிய போராட்டத்தில் ஈடுபடுவோம். – என்றார்.

# வன்னி மக்களின் பிரச்சினை குறித்து நியூஸிலாந்து தூதருடன் கலந்தாய்வு!



ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட பிர தான அமைப்பாளர் லக்ச யன் முத்துக்குமாரசாமி மற் றும் வவுனியா ஒருங்கிணைப்பாளர் நிரோஸ்குமார் ஆகியோர் நியூஸிலாந்து உயர்ஸ்தானிகரை சந்திந்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்த சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

இந்தச் சந்திப்பில் வன்னி மாவட்டத்தின் அரசியல் கள நிலைவரம் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளதாக தவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய வன்னி மாவட்ட உழவர்களின் பெரும் குறையாக இருக்கும் நெல் காயவைக்க தனியான நிலப்பரப் பின் தேவை பற்றியும் வன்னி மாவட் டத்தின் நீண்டகாலத் குறையாக இருக்கும் தீயணைப்பு பிரிவின் தேவைப்பாடு பற்றியும் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வவுனியா முல்லைத்தீவு மக்களின் சிறுநீரக நோய் அதிகரிப்பு மற்றும் வைத்தியசாலை உபகரணங்களின் தேவைப்பாடு பற்றியும் சுத்தமான சுகாதாரமான நீர்த் தேவை பற்றியும் உயர்ஸ்தானிக ரோடு கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# சட்டவிரோதமாக கஞ்சா செடிகளை வளர்த்தவர் புத்தளத்தில் கைதானார்



புத்தளம் – கிவுல பகுதியில் தோட்டமொன்றில் சட்டவிரோதமாக கஞ்சா செடிகளை வளர்த்து வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கைது நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

பாலாவி விமானப்படைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவ லுக்கமைய பொலிஸ் விடே அதிர டிப் படையினருடன் இணைந்து குறித்த சுற்றிவளைப்பை மேற் கொண்ட போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 10 கஞ்சா செடி கள் கைப்பற்றப்பட்டன எனவும் பாலாவி விமானப் படைப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித் துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரும், கைப்பற்றப் பட்ட கஞ்சா செடிகளும் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன என பாலாவி விமானப் படைப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிரியாவில் மட்டும் 50 லட்சம் பேர் மக்கள் வீடுகளை இழந்து நிர்கதி

நிலநடுக்கத்தால் சிரியாவில் மட்டும் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை இழந்திருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. கடும் உறை குளிருக்கு மத்தியில் அவர்களின் நிலை மிக மோசமாக இருக்கின்றன என்று உதவி அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

துருக்கி – சிரிய எல்லையில் கடந்த 6ஆம் தேதி அடுத்தடுத்து ஏற்பட்ட இரு பயங்கர நிலநடுக்கத்தில் ரிச்டரில் 7.8, 7.5 புள்ளி என்ற அளவில் பதிவானது. நிலநடுக்கத்துக்கு இதுவரை 28 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இதில், போரினால் பாதிக்கப்பட்டு மெல்ல மீண்டுவந்துகொண்டிருந்த சிரிய மக்கள் பலரும் மீண்டும் வீடற்றவர்களாக மாறியுள்ளனர்.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை தரப்பில், உள்நாட்டுப் போரில் அகதிகளாக உள்நாட்டிலே அலைந்து கொண்டிருந்த சிரிய மக்களுக்கு இந்த நிலநடுக்கம் மேலும் துயரை அதிகரித்துள்ளது. சிரியாவை பொறுத்தவரை, இது ஒரு நெருக்கடிக்குள் நெருக்கடி. போர், கொரோனா, பொருளாதார சரிவினால் சிரியா பாதிக்கப்பட்டிருந்தது. இந்த கடினமான சூழலில் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 50 லட்சம் பேர் வரை வீடுகளை இழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐ.நா. செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக், 12 ஆண்டுகளாக போரை எதிர்கொண்டிருக்கும் நாட்டு மக்கள் தற்போது நிலநடுக்கத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள். நிலநடுக்கத்திற்கும் முன்னரே 40 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் அடிப்படை உதவிகள் இல்லாமல் இருந்தனர். இந்த நிலையில், இந்த நிலநடுக்கம் இந்த எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. சிரியாவில் நிலநடுக்கத்தினால் சாலைகள், பாலங்கள் உள்ளிட்ட பல உள்கட்டமைப்புகள் அழிந்துள்ளன என்றார்.



# பிறந்து 10 நாட்கள் மட்டுமேயான சிசுவும் தாயும் துருக்கியில் மீட்பு

துருக்கியில் பிறந்து 10 நாட்களான குழந்தை 90 மணி நேரங்களுக்குப் பிறகு இடிபாடுகளிலிருந்து தாயுடன் மீட்கப்பட்டது.

திங்கள்கிழமை ஏற்பட்ட பூகம்பத் தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட துருக்கியில் ஹடாய் நகரமும் ஒன்று. இங்கு ஆறாவது நாளாக மீட்பு பணிகள் நடந்து வருகிறது.

இந்த நிலையில், ஹடாய் நகரில் பிறந்த 10 நாட்களான குழந்தை ஒன்று, அதன் தாயுடன் 90 மணி நேரங்களுக்குப் பிறகு மீட் கப்பட்டுள்ளமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. யாகிஸ் என்று பெயரிடப்பட்டுள்ள அக்குழந்தை காயங்களுடன் மருத்து வமனையில் தாயுடன் சிகிச்சை பெற்று வருகிறது. இருவரது உடல் நிலை குறித்தும் கூடுதல் தகவல் தெரியவில்லை.

நிலத்தால் ஏற்பட்ட பேரழிவுக்கு இடையே நீண்ட போராட்டங்களுக்குப் பிறகுப் உயிர்கள் மீட்கப்பட்டு வருவது துருக்கி மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக, இந்தப் பூகம்பத்தை இந்த நூற்றாண்டின் பேரழிவு என்று துருக்கி அதிபர் எர்டோகன் தெரிவித்துள் ளார்.

ஆனால், துருக்கி எதிர்கட்சியினர் எர்டோகனை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். எர்டோகன் நிலநடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு தயாராகவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும், நிலநடுக்கம் மீட்பு நடவடிக்கைகளில் எர்டோகன் அரசு மீது துருக்கி மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். வரும் மே மாதம் துருக்கியில் பொதுத் தேர்தல் நடக்கும் நிலையில் இந்த இயற்கை பேரிடர் எர்டோகனின் அரசியல் பயணத்தில் பெரும் அடியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மீண்டும் காதலில் வீழ்ந்தார் கேட்ஸ்



உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரும் மைக்ரோசாஃப்ட் துணை நிறுவனருமான பில் கேட்ஸ், டென்னிஸ் ஆர்வலரும் சமூக ஆர்வலருமான பௌலா ஹர்டுடன் காதலில் விழுந்துள்ளார் என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

67 வயதாகும் பில் கேட்ஸ், அண்மையில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன், ஆடவர் ஒற்றையர் இறுதிப் போட்டியில், பௌலா ஹர்டுடன் ஒன்றாக அமர்ந்திருந்து டென்னிஸ் போட்டியை ரசித்த புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருக்கின்றன.

இவருக்கும் நெருங்கிய வட்டாரங்களும், இவர்களது காதலை உறுதி செய்திருப்பதாக சில பொழுதுபோக்கு செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ஆனால், பௌலா ஹர்டு இதுவரை பில் கேட்ஸின் பிள்ளைகளை நேரடியாகச் சந்திக்கவில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

டெய்லி மெயில்தான் இவர்களது காதல் பற்றி முதல் செய்தியை பகிர்ந்திருந்தது. இருவருக்கும் நெருங்கிய நட்பு வட்டாரங்களும் இதனை உறுதி செய்திருப்பதாக மேற்கோள்காட்டப்பட்டிருந்தது. இவர்கள் இருவரும் ஓராண்டுக்கும் மேலாக ஒன்றாக இருக்கின்றனர் எனவும் இவருக்கும் இடையே காதல் மலர்ந்திருப்பதாகவும் அவர்களது நண்பர்கள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**யார் இந்த பௌலா ஹர்டு?**

60 வயதாகும் பௌலா ஹர்டு, ஒரக்கிள் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாகி மறைந்த மார்க் ஹெர்டுவின் மனைவி. 30 ஆண்டுகளுக்கு முன்பு ஹர்டுடன் திருமணம் முடிந்த நிலையில் 2019ஆம் ஆண்டு அக்டோபரில் ஹர்டு உயிரிழந்தார்.

**சூசகமாகக் கூறியிருந்த பில் கேட்ஸ்..**

அண்மையில் தனியார் ஊடகத்துக்கு பேட்டியளித்திருந்த பில் கேட்ஸ், டேட்டிங் குறித்து வெளிப்படையாக இருப்பதாகக் கூறியிருந்தார். மீண்டும் உங்கள் வாழ்க்கையில் மிகவும் விருப்பத்துக்குரியவர் ஒருவர் வருவாரா என்ற கேள்விக்கு.. நிச்சயமாக, நான் ஒன்றும் ரோபோ இல்லை என்று பதிலளித்திருந்தார்.

# கனடாவிலும் மர்மப்பொருள் வானில் சுட்டு வீழ்த்தப்பட்டது



கனடாவில் வான்வெளியில் பறந்துகொண்டிருந்த மர்ம பொருள் வான் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. அமெரிக்காவில் மர்மப்பொருள் சுட்டுவீழ்த்தப்பட்டதன் பின்னரர் இரண்டாவது மர்மப் பொருள் கனடாவில் சுட்டு வீழ்த் தப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கனடாவின் யூகோனில் வான் வெளியில் பறந்த மர்ம பொருளை கனடா, அமெரிக்கா போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தின என கனடா தலைமை அமைச்சர் ஜஸ்டீன் ட்ரூடோ தனது கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளார். தனது உத்தரவின் பேரில் வான்வெளியில் பறந்து கொண்டிருந்த மர்ம பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்து தனது சுட்டுரையில் கனடா பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ தெரிவித்திருப்பதாவது:

மர்மபொருள் சுட்டுவீழ்த்தப்பட்டது தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோ பைடனிடம் தொடர்புகொண்டு பேசினேன். தகவலளித்த வடஅமெரிக்க விண்வெளி பாதுகாப்பு அமைப்பிற்கு நன்றி. மேலும், சுட்டுவீழ்த்தப்பட்ட மர்ம பொருளின் பாகங்களை சேகரித்து கனடா படைகள் ஆய்வு நடத்தும்.

# கெட்டதிலும் ஒரு நல்லது!

தென் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக 30 ஆண்டுகளில் முதல் முறையாக துருக்கிக்கும் ஆர்மீனியாவுக்கும் இடையிலான எல்லைப் பகுதி திறக்கப்பட்டுள்ளது.

ஆர்மீனியாவுக்கான துருக்கியின் சிறப்புத் தூதர் செர்டார் கிலிக், இரு நாடுகளையும் பிரிக்கும் எல்லைப் பகுதியான துருக்கியப் பகுதியில் உள்ள அலிகன் சோதனைச் சாவடி வழியாக வாகனங்கள் செல்லும் ஒளிப்படங்களை கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

துருக்கியில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள எங்கள் மக்களின் துன்பங்களைப் போக்க ஆர்மீனியா மக்கள் அனுப்பிய ஏராளமான உதவியை நான் எப்போதும் நினைவில் கொள்கிறேன் என்று கிலிக் கூறினார். மேலும் ஆர்மேனிய அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

1988இல் நிலநடுக்க்கத்தால் பாதிக்கப்பட்ட ஆர்மீனியாவிற்கு துருக்கிய செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து உதவிகளை அனுப்ப கடைசியாக இந்த எல்லைப் பகுதி பயன்படுத்தப்பட்டது.





# கிண்ணியா பிரதேசத்தில் நெல் விளைச்சல் குறைவு

திருகோணமலை – கிண்ணியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் தற்போது பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்று வரும் நிலையில் அங்கே விளைச்சல் குறைவாக உள்ளதாகவும், நெல்லுக்கான உத்தரவாத விலை இல்லாததாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வெட்டுக் கூலி, டீசல் தட்டுப்பாடு உள்ளிட்ட பல இன்னல்களைத் தாம் எதிர்நோக்குவதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரி விக்கின்றனர். மேலும், கிண்ணியா சூரங்கல், கற்குழி பகுதியில் தற்போது இயந் திரம் மூலமான அறுவடை இடம்பெறுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் போதுமான உரமானியம் கிடைக்காமை முதலிய பல குறைபாடுகள் காணப்படுகின்றமையால் இம்முறை மஞ்சள் நோய்த்தாக்கம் ஏற்பட்டு விளைச்சலின்மை பெரும் நஷ்டத்தை உண்டாக்கியிருப்பதாகவும் தெரிவிக் கின்றனர்.

அரசாங்கம் விவசாயிகளின் விடயத்தில்கரிசனைகாட்டிதங்களுக்கு உதவுமாறும்விவசாயிகள்கோரிக்கை விடுக்கின்றனர்.

# உரிமம் இல்லாத துப்பாக்கிகளை ஒப்படைப்பதற்கு கால அவகாசம்!

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

அனுமதிப்பத்திரம் இன்றி துப்பாக்கிகளை வைத்திருக்கும் நபர்களுக்கு துப்பாக்கிகளை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சுஅவகாசம்வழங்கியுள்ளது.

பெப்ரவரி 6 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட அரச வர்த்தமானியின் படி பெப்ரவரி 06 திகதி முதல் 15 திகதி வரையில் சலுகைக் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக உரிமம் இல்லாமல் வைத்திருக்கும் அனைத்து இந்த சலுகை காலத்தில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒப்படைக்கும் நபர்களுக்கு எதிராக எந்த வழக்கும் தொடரபடமாட்டாது. கால அவகாசம் முடிவடைந்ததும் உரிமம் இன்றி துப்பாக்கிகளை வைத்திருக்கும் நபர்களை கைது செய்ய பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சு மேலும் தெ ள்ளது.

உரிமம் இல்லாமல் துப்பாக்கி வைத்திருப்பவர்களைக் கைது செய்து மற்றும் வழக்குத் தொடரப்படுவதைத் தவிர்க்க இந்த சலுகைக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

## இரும்புக் கம்பிகளை திருடிய குற்றச்சாட்டில்

# 4 ரயில்வே அதிகாரிகளை இடைநிறுத்த அதிரடி முடிவு!

மஹவ முதல் ஓமந்தே வரையான ரயில் பாதையைப் புனரமைக்கும் திட்டத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான இரும்புகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் ரயில்வே திணைக்களத்தின் நான்கு அதிகாரிகளின் சேவையை இடை நிறுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன நடவ டிக்கை எடுத்துள்ளார்.

சம்பந்தப்பட்ட நான்கு அதிகாரிகளும் திட்டத்தில் உயர் பதவியில் இருப்பவர்கள் என்றும், சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இவர்களால் திருடப்பட்டதாகக் கூறப்படும் இரும்பின் பெறுமதி இதுவரை மதிப்பிடப்படவில்லை எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# சர்வதேசத்திடம் யாசகம் கேட்க ஊழல் மோசடிகளே காரணமாம்!

## சாடுகின்றார் பேராயர் கர்தினால்



சுதந்திர தினத்தை பிரம்மாண்டமாக கொண்டாடி எமது நாடு சிறப்பாகவுள்ளதாக வெளிநாட்டுத் தூதுவர்களிடமும், இராஜதந்திரிகளிடமும் காண்பித்துக்கொண்டிருக்கும் அதேவேளை, மறுபுறம் சர்வதேசத்திடம் யாசகம் கேட்டு சென்றுகொண்டிருக்கின்றோம்.

கடந்த 75 ஆண்டுகளாக இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகளே இதற்குக் காரணமாகும் என்று பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தற்போது இலங்கை பாரிய நெருக்கடி மிக்க நாடாகக் காணப்படுகிறது. கடந்த 75 ஆண்டுகளாக இடம்பெற்ற ஊழல் மோசடிகளால் இந்த நிலைமை ஏற்பட்டது.

இலங்கை இன்று பொருளாதார ரீதியில் மாத்திரமின்றி, சகல துறைகளிலும் வீழ்ச்சியடைந்த நாடாகக் காணப்படுகிறது.

பொருளாதார சீர்குலைவால் மாத்திரமின்றி அனைத்துத் துறைகளினதும் சீர்குலைவின் காரணமாகவே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.

எமது மக்கள் சரியான தீர்மானங்களைநடைமுறைப்படுத்துவதற்குத் தயாராக இல்லை. நீதியை போன்றே சரியானவற்றை நடைமுறைப்படுத்துவதை இன்றுமக்கள் மறந்துள்ளனர்.

தமக்கு ஏதேனு மொன்று கிடைக்கப் பெறும் என்ற எதிர்பார்ப்பிலேயே அனைத்தையும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

உயர் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரை எவரேனும் ஒருவரிடம் ஏதாவதொன்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

பெப்ரவரி 4 ஆம் திகதி என்ன சுதந்திரதினத்தைகொண்டாடினோம்?

21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, தேசிய கொடியேற்றப்பட்டு, வீதிகளில் மரியாதை அணிவகுப்புக்களை ஏற்பாடு செய்து, இது சிறந்தநாடுஎன்பதைத்தூதுவர்களுக்கும், வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் காண்பித்தோம்.

ஆனால், மறுபுறம் சர்வதேசத்திடம் யாசகம் கேட்டு சென்றுகொண்டிருக்கின்றோம்.

இதுவா சுதந்திரம்? புரட்சியுடன் சுதந்திரதினத்தைக்கொண்டாடுவோம் என்று ஜனாதிபதி கூறுகின்றார். அது எமது சுதந்திரமா அல்லது ஜனாதிபதியின் சுதந்திரமா?

இலங்கை இதற்கு முன்னர் இழைத்துள்ள பல தவறுகளின் காரணமாகவே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் பிரதானமானது திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தியமையாகும்.

எமது நாட்டில் காணப்படும் பொருள்களுக்கான தட்டுப்பாடு இந்தியாவுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. சீனாவுடனும் இவ்வாறான உறவே காணப்படுகிறது.

தற்போதுள்ள கடனை மீளச் செலுத்த முடியாமல், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மேலும் கடன் பெறவுள்ளனர். நாம் எமது தாய்நாட்டைச் சீரழித்துள்ளோம். – என்றார்.

# 13 ஆவது அரசமைப்பை ஜனாதிபதி ரணில் நிச்சயம் முழுமையாக நடைமுறைப்படுத்துவார்!

## அமைச்சர் டக்ளஸ் அபரிமித நம்பிக்கை



ஆரம்ப காலங்களில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டால் தென்னிலங்கைத் தலைவர்கள் அதனைக் கைவிட்டுவிடுவர்.

ஆனால் கடந்த வாரம் நாடாளுமன்ற வளாகத்தில் பாரிய எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்ட போதிலும் , ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு செயற்படவில்லை. எனவே அவர் 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவார் என்று நம்புவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்திய நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ்.கலாசார நிலையத்தை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்–

நாட்டில் குழப்ப நிலைமையில் காணப்பட்ட போது அதனைப் பொறுப்பேற்று பாதுகாத்து மீட்டெடுத்துக் கொண்டிருக்கின்றார் ரணில். தமிழ் மக்கள் வெறுமனே தமிழர்களாக மாத்திரமின்றி இலங்கையர்களாகவும் இருக்க விரும்புகின்றனர் என்பதை உணர்ந்தவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமது பிரச்சினைகளைத் தீர்ப்பார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

பிரபலத்தைத் தேடித்தரும் அரசியலில் ஈடுபடாமல் நாட்டினதும் நாட்டு மக்களினதும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையே ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

அவர் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதைப்போன்று 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நடை முறைப்படுத்துவார் என்று நம்புகின்றோம்.

நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த வாரம் இது தொடர்பில் சிலர் அறியாமையால் கூச்சலிட்டிருந்த போதிலும் , ஜனாதிபதி அதனைப் பொருட்படுத்தவில்லை. ஆரம்பத்தில் இவ்வாறான பிரச்சினைகள்வரும்போது தென்னிலங்கைத் தலைவர்கள் அதனைக் கைவிட்டுவிடுவார்கள். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வாறு எதனையும் செய்யவில்லை.

மாறாக, அவர் எமது மக்களின் உணர்வுகளைப் பிரதிபலித்திருக்கின்றார். அவ்வாறன்றிவெறுமனே ஓர் அரசியல்வாதியாக மாத்திரம் செயற்படவில்லை. எனவே ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் நடைமுறை சாத்தியமான செயற்திட்டங்களைநடைமுறைப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும். – என்றார்.

# போலி பிரசாரத்தில் தமிழ் அரசுக் கட்சி!

## குருசாமி சுரேந்திரன் சாடல்




தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் இருந்து பிரிந்து சென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி போலி பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறதாக ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசு கட்சி பிரிந்து தனித்து போட்டியிடுவதாக முடிவெடுத்த பின்னர் தற்போது மக்களிடையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சிகள் தான் தமிழரசு கட்சியை வெளியேற்றின என பொய்யான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

தனிக்கட்சி தாங்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று மக்களிடையே பரப்புரைகளை மேற்கொண்டு வரும் செயல்பாடு மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஐந்து கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்புதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர ஒரு தனி கட்சி தமிழ்த்தேசியக்கூட்டமைப்புஇல்லை.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளை உள்வாங்கி ஒரு பலமான இயக்கமாக செயல்படும் எனத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ராஜபக்ஷாக்களைப் பாதுகாப்பதையே தனது கடமையாகக் கருதும் ரணில்!

## இம்ரான் மகரூப் குற்றச்சாட்டு



ராஜபக்ஷாக்கள் செய்த ஊழலால் ஏற்பட்ட பாதிப்புக்களை மக்கள் தலையில் கட்டி இந்த அரசாங்கம் வேடிக்கை பார்த்து வருகின்றது எனத் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ராஜபக்ஷாக்கள் ஆட்சிப் பீடமேறியது முதல் நாட்டில் கமிசன் செயற்பாடுகள் அதிகரித்தன. ஊழல் உச்சக்கட்டத்தில் இருந்தது.

பொருத்தமற்ற பொருளாதார நடைமுறைகளை அவர்கள் பின்பற்றினர். இதனால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்தது. பொருள்களின் விலைகள் 300 முதல் 500 வீதம் வரை அதிகரித்தன. இன்றும் அதிகரித்து வருகின்றன.

எனினும் வருமானத்தில் எந்த அதிகரிப்பும் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் பொதுமக்கள் சொல்ல முடியாத அளவு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

நாட்டின் இந்த நிலைக்கு காரணமானவர்கள் மிகவும் சந்தோசமாக தைரியமாக நடமாடி வருகின்றார்கள். அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

ஆனால், அவர்களால் உருவாக்கப்பட்ட சகல நட்டங்களையும் இழப்புகளையும் பொதுமக்கள் தலையில் கட்டி இந்த அர சாங்கம் வேடிக்கை பார்த்து வருகின்றது.

ராஜபக்ஷர்கள் காலத்தில் இடம்பெற்ற பல மோசடிகளும் அதனால் ஏற்பட்ட பாரிய நிதி இழப்புகளும் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள சகலரும் இவற்றை விளங்கிக் கொண்டுள்ளனர்.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

பொதுமக்கள் எப்படி கஷ்டங்களை அனுபவித்தாலும் ராஜபக்ஷர்களைப் பாதுகாப்பதே தனது கடமை என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றார்.

இந்த விடயங்களைப் பொதுமக்களுக்கு மீள நினைவுபடுத்த விரும்புகின்றேன். நாட்டை பிச்சைக்கார நாடாக்கிய மொட்டுக் கட்சியினருக்கும் அவர்களுக்குத் துணை போனவர்களுக்கும் நமது பொன்னான வாக்குகளை அளிக்கலாமா என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோன்று இவ்வளவு அநியாயங்கள் செய்தவர்களைப் பாதுகாத்து தமது சுகபோகத்தை மட்டும் கவனத்தில் கொண்டு செயற்பட்டுவரும் யானைக் கட்சியினருக்கும், அவர்களோடு சேர்ந்தவர்களுக்கும் வாக்களிக்கலாமா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

இறைவனால் நமக்கு சிந்திக்கும் ஆற்றல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அனைவரும் சிந்திப்போம். ஊழல்வாதிகளுக்கும், அவர்களுக்குத் துணை போனவர்களுக்கும் இந்தத் தேர்தல் மூலம் நல்ல பாடம் படிப்பிப்போம். – எனக் கூறியுள்ளார்.

# பொலிஸ் குதிரைகளுக்கு உள்ளூர் உணவுகள்!

## டொலர் பிரச்சினை காரணமாம்

டொலர் பிரச்சினை காரணமாகப் பொலிஸ் குதிரைகளுக்கு கொண்டைக் கடலை, உளுந்து, சோளம் போன்ற உள்ளூர் உணவுகளை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் குதிரைப்படை பிரிவு தெரிவித்துள்ளது.

குதிரைகளுக்கு உள்ளூர் உணவை வழங்குவதற்கான பரிசோதனைகள் மிகவும் வெற்றியடைந்துள்ளன என பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொலிஸ் குதிரைப்படை பிரிவுக்கு மேலும் 12 குதிரைகளை வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியப் புலமைப் பரிசில்கள்

கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயம் முழுமையான நிதியுதவியுடன் கூடிய 200 புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை பல்வேறு மட்டங்களிலும் உள்ள இலங்கைப் பிரஜைகளிடம் கோரியுள்ளது.

இந்த புலமைப்பரிசில் திட்டம் மூலமாக இந்தியாவின் மிகவும் பிரபலமான, மதிப்புமிக்க கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக வாய்ப்பை இந்தியா ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தில் மருத்துவம், பாராமெடிக்கல், ஃபேன் டிசைன் மற்றும் சட்டம் ஆகிய துறைகள் உள்ளடக்கப்படவில்லை.

இலங்கை பிரஜைகளுக்கு மட்டும் பிரத்தியேகமாக வழங்கப்படும் 2023–2024 கல்வி ஆண்டுக்கான புலமைப்பரிசில்கள், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் வழங்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை கல்வி அமைச்சின் இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் தகுதிக்கான அளவுகோல்கள் மற்றும் தேர்வு நடைமுறைகள் பற்றி மேலும் அறிந்துக் கொள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு அல்லது கல்வி அமைச்சு என்பவற்றை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# பெண்ணிடம் அராஜகமாக நடந்துகொண்ட நிர்வாகி!

## அமைச்சர் ஜீவனின் நடவடிக்கையால் பணி நீக்கம்

இராகலை, ஹைபொரஸ்ட் பகுதியில் வாழ்வாதாரத்துக்காக வீதி ஓரத்தில் மரக்கறி விற்பனையில் ஈடுபட்டிருந்த மலையக பெண்ணிடம் அடாவடித்தனமா கவும், அராஜகமாகவும் நடந்து கொண்ட மத்துரட்ட பெருந்தோட்ட யாக்கத்தால் நிர்வாகி ஒருவர் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பணிப்புரையின் கீழ் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் கண்டிப்பான உத்தரவின் பிரகாரமே மத்துரட்ட பெருந்தோட்ட யாக்கத்தால் இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பாதிக்கப்பட்ட பெண்ணிடம் எழுத்துமூலம் மன்னிப்பு கோருவதற்கும் மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.



மத்துரட்ட பெருந்தோட்ட நிறுவனத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்ட ராகலை, ஹைபோரஸ்ட் பகுதியில் பிரதான வீதியில் ஓரத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் மரக்கறி விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அந்த இடத்துக்கு வந்த மத்துரட்ட பெருந்தோட்ட யாக்கத்தின் நிர்வாகி அங்கு மரக்கறி விற்பனை செய்ய வேண்டாமென சம்பந்தப்பட்ட பெண்ணை கடும் தொனியில் மிரட்டி – அடாவடியில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பான காணொளியும் சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற பின்னர் மத்துரட்ட பிளான்டேசனுக்கு உடன் அழைப்பை ஏற்படுத்திய அமைச்சர் ஜீவன் தொண்டமான், அந்த நிர்வாகியின் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

அத்துடன் அவரை உடனே நீக்கு மாறும் பணிப்புரை வழங்கினார். இதனை ஏற்ற பெருந்தோட்ட யாக்கம், அதிகாரியை உடனடியாக பணி நீக்கம் செய்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணிடம் எழுத்து மூலம் மன்னிப்பு கோரவும் இணங்கியுள்ளது. அதேபோல இனியும் அப்பகுதியில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காதெனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

# அரசமைப்பில் உள்ள அனைத்தையும் நிறைவேற்றுவது ரணிலினது கடமை

## நினைவுபடுத்துகிறார் ரவூப் ஹக்கீம்



நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் அரசமைப்பில் உள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு அவர் கடப்பாடு உடையவர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் அரச கொள்கை விளக்கவுரை மீதான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பண்டாரநாயக்கவின் உயிரை பறித்தவரும் பௌத்த துறவியே. அதேபோன்ற வரலாறு மீண்டும் நடந்து வருகிறது என்றே கூற வேண்டும்.

இந்தச் சபையில் உரையாற்றியிருந்த சுமந்திரன், பிரிக்கப்படாத நாட்டுக்காகத் தான் எழுந்து நிற்பதாக பல தடவைகள் கூறியுள்ளார். இதனால் ஏன் அதிகார பகிர்வு தொடர்பில் அலட்டிக்கொள்ள வேண்டும் என வினவியுள்ளார்.

# பண்ணைக் கடந்கரைப் பகுதியில் வடமாகாண மரநடுகைத் திட்டம்!





இயற்கை வளத்தை மேம்படுத்துவோம், பசுமையை உருவாக்குவோம் எனும் கருப்பொருளில் வட மாகாண மரநடுகை யாழ். பண்ணை கடற்கரைப் பகுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வை வடமாகாண ஆளுநர் செயலகம் மற்றும் யாழ். மாநகரசபை ஒழுங்கமைத்துள்ளது.

மர நடுகை நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீவன்தியாகராஜா வருகை தந்தார்.

மேலும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட் மற்றும் வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பதவிநிலை அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டு மரம் நட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு


# ‘யாழ்ப்பாணம் மாவட்ட கலாசார விழா’




















# மூன்றே நாள்களில் முதல் டெஸ்ட் முடியும் என்று எதிர்பார்க்கவில்லை

## இந்திய அணித் தலைவர் தெரிவிப்பு



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டம் இப்படி 3 நாட்களிலேயே முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கவில்லை என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் ரோகித் சர்மா. தமது அணி சிறப்பாகத் தயாராகி இருந்ததால் இந்த வெற்றி சாத்தியமாகியதாகவும் அவர் தெரிவித்தார்.

3 நாட்களுக்குள் போட்டி முடிவடையும் என எதிர்பார்க்கவில்லை. பந்து வீச்சில் ஒவ்வொரு அமர்வாக செலவிடவே தயாராக இருந்தோம். ஆஸ்திரேலிய அணி ஒரே அமர்வில் ஆட்டமிழந்து விடுவார்கள் என நாங்கள் ஒருபோதும் நினைக்கவில்லை. ஆடுகளத்தின் தன்மை மெதுவாக மாறிக் கொண்டே சென்றது. பந்துகள் எழவில்லை. இது எனக்கு சற்று ஆச்சர்யமாக இருந்தது. ஆஸ்திரேலிய அணியின் மனநிலை என்னவென்று எனக்கு தெரியாது. ஆனால் எங்கள் அணி உறுதியாக இருந்தது.

கடந்த 3 முதல் 4 ஆண்டுகளாகவே இது போன்ற ஆடுகளங்களில் விளையாடி வருகிறோம். பயிற்சியின்போது சிறந்த முறையில் தயாராகி இருந்தோம். எப்போதும் சிறந்த முறையில் தயாராகும்போது கிரிக்கெட்டில் மட்டும் அல்ல எல்லா இடங்களிலும் நம்பிக்கை கிடைக்கும் என்றார் ரோகித் சர்மா.

ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் பாட் கம்மின்ஸ் தெரிவித்ததாவது:

இந்தியாவில் சில நேரங்களில் விளையாட்டு மிக விரைவாக நகர்கிறது. இந்திய அணி வீரர்கள் சிறப்பாக விளையாடினார்கள். பந்து சுழலும்போது சுழற்பந்து வீச்சாளர்கள் எப்போதும் கடினமாக உழைப்பார்கள். ரோஹித் சர்மா நன்றாக விளையாடினார். முதல் இன்னிங்ஸில் பந்து சுழன்றது. ஆனால் விளையாட முடியாத அளவுக்குச் சுழலவில்லை.

நாங்கள் இன்னும் கூடுதலாக 100 ஓட்டங்கள் எடுத்திருக்க வேண்டும். துடுப்பாட்டத்தில் தொடக்கம் கடினமானது, ஆனால் எங்கள் துடுப்பாடக்காரர்களில் 3 முதல் 4 வீரர்கள் சிறப்பாகத் தொடங்கினர். சிறப்பான தொடக்கம் கிடைத்தால் அதை பெரிய அளவில் மாற்றவேண்டும். அது நிகழவில்லை. சுழற்பந்து வீச்சில் மர்பி சிறப்பாகச் செயல்பட்டார் என்றார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதல் இன்னிங்ஸில் ஜடேஜாவும் இரண்டாவது இன்னிங்ஸில் ரவிச்சந்திரன் அஸ்வினும் 5 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினர்.

நாக்பூரில் உள்ள விதர்பா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெற்று வந்த இந்த போட்டியில் ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 177 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அதிகபட்சமாக மார்னஷ் லபுனே 49, ஸ்டீவ் ஸ்மித் 37 ரன்கள் சேர்த்தனர். ஜடேஜா 5, அஸ்வின் 3 விக்கெட்கள் கைப் பற்றினர்.

இதையடுத்து விளையாடிய இந்திய அணி 2ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 114 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 321 ஓட்டங்கள் எடுத்தது. ரவிச்சந்திரன் அஸ்வின் 23, சேதேஷ்வர் புஜாரா 7, விராட் கோலி 12, சூர்யகுமார் யாதவ் 8, ரோஹித் சர்மா 120, பரத் 8 ரன்களில் ஆட்டமிழந்தனர். ரவீந்திர ஜடேஜா 66, அக்சர் படேல் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய இந்திய அணி 139.3 ஓவர்களில் 400 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது. ஜடேஜா 185 பந்துகளில், 9 பவுண்டரிகளுடன் 70 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டாட் மர்பி பந்தில் வெளியேறினார். அக்சர் படேலுடன் இணைந்து 8ஆவது விக்கெட்டுக்கு ஜடேஜா 88 ஓட்டங்கள் சேர்த்தார்.

இதையடுத்துக் களமிறங்கிய மொகமது மி அதிரடியாக விளையாடினார். மட்டையை சுழற்றிய அவர், 47 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்கள் விளாசிய நிலையில் மர்பி பந்தில் அலெக்ஸ் கேரியிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அக்சர் படேலுடன் இணைந்து மொகமது மி 9ஆவது விக்கெட்டுக்கு 52 ஓட்டங்கள் சேர்த்தார். கடைசி விக்கெட்டாக அக்சர் படேல் 174 பந்துகளில், ஒரு சிக்ஸர், 10 பவுண்டரிகளுடன் 84 ரன்கள் எடுத்த நிலையில் பாட் கம்மின்ஸ் பந்தில் தனது இலக்கைப் பறிகொடுத்தார்.

ஆஸ்திரேலிய அணி தரப்பில் அறிமுக சுழற்பந்து வீச்சாளரான டாட் மர்பி 7 விக்கெட்களையும், பாட் கம்மின்ஸ் 2, நேதன் லயன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 223 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய ஆஸ்திரேலிய அணி தொடக்கத்திலேயே ரவிச்சந்திரன் அஸ்வினின் சுழல் வலையில் சிக்கியது. உஸ்மான் கவாஜா (5), டேவிட் வார்னர் (10), மேட் ரென்ஷா (2), பீட்டர் ஹேண்ட்ஸ்கம்ப் (6), அலெக்ஸ் கேரி (10) ஆகியோர் அஸ்வின் பந்தில் நடையைக் கட்டினர். மார்னஷ் லபுனே 17 ஓட்டங்களில் ஜடேஜா பந்தில் கால்காப்பில் பந்தை வாங்கி வெளியேறினார்.

64 ஓட்டகளுக்கு 6 விக்கெட்களை இழந்த ஆஸ்திரேலிய அணி அதன் பின்னர் மீள முடியாமல்போனது. பாட் கம்மின்ஸ் ஒரு ஓட்டத்தில் ஜடேஜா பந்திலும், டாட் மர்பி 2 ஓட்டங்களில் அக்சர் படேல் பந்திலும் நடையை கட்டினர். நேதன் லயன் (8), ஸ்காட் போலண்ட் (0) ஆகியோரை மொகமது மி வெளியேற்றினார். முடிவில் ஆஸ்திரேலிய அணி 32.3 ஓவர்களில் 91 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. ஸ்டீவ் ஸ்மித் 51 பந்துகளில், ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 25 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய அணி தரப்பில் அஸ்வின் 5, ஜடேஜா 2, மொகமது மி 2, அக்சர் படேல் ஒரு விக்கெட் கைப்பற்றினர். இன்னிங்ஸ் மற்றும் 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட பார்டர்–கவாஸ்ர் டிராபி டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் 1–0 என முன்னிலை பெற்றது. துடுப்பாட்டத்தில் 70 ஓட்டங்களும், பந்து வீச்சில் இரு இன்னிங்ஸையும் சேர்த்து 7 விக்கெட்களும் வீழ்த்திய ஜடேஜா ஆட்ட நாயகனாகத் தேர்வானார். 2ஆவது டெஸ்ட் போட்டி வரும் 17ஆம் திகதி டெல்லியில் தொடங்குகிறது.

# வார்னருக்குப் பதில் ஹெட் ஆஸி. அணியில் மாற்றம்

டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடருக்காக இந்தியா வந்திருக்கும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தனது இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் டேவிட் வார்னருக்குப் பதில் வேறொருவரைக் களமிறக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இன்னிங்ஸ் வெற்றியைப் பதிவு செய்தது. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி மோசமான தோல்வியைத் தழுவியது. ஆஸி. அணியின் தொடக்கத் துடுப்பாளரான வார்னர் சிறப்பாகச் செயற்பட்டிருக்க வில்லை. 12 பந்துகளை எதிர்கொண்ட அவர் ஒரேயொரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்திருந்தார். இரண்டாவது இன்னிங்ஸிலும் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

இதனால் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் டேவிட் வார்னருக்குப் பதிலாக டிராவிஸ் ஹெட் ஆஸ்திரேலிய அணியில் சேர்க்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவர் வெளிநாட்டு ஆடுகளங்களில் விளையாடும்போது அவருடைய மோசமான திறனே வெளிப்படுவது தொடர்கிறது.

தொடக்க ஆட்டக்காரர்கள் சிறப்பான தொடக்கத்தை அளிக்காததால் பெரிய அளவிலான ஓட்டங்களை ஆஸ்திரேலியாவால் எடுக்க முடியவில்லை.

ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 177 ஓட்டங்களுக்கும், இரண்டாவது இன்னிங்ஸில் 91 ஓட்டங்களுக்கும் தனது அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் 91 ஓட்டங்கள் எடுத்ததே இந்திய மண்ணில் ஆஸ்திரேலிய அணி எடுத்த மிகவும் குறைந்த பட்ச ஓட்ட எண்ணிக்கையாகும்.

முதல் டெஸ்டில் டேவிட் வார்னர் சிறப்பான ஆட்டத்தினை வெளிப் படுத்தத் தவறியதால் அவருக்குப் பதிலாக டிராவிஸ் ஹெட்டினை அணியில் சேர்ப்பதற்கான ஆலோசனை நடந்து கொண்டிருப்பதாக ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இடது கை சுழற்பந்து வீச்சாளரான மேட் குன்மேன் அணி யில் இடம் பிடிக்க உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் ஆட்டம் பெப்ரவரி 17ஆம் திகதி டில்லியில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க பெண்கள் மீது இங்கிலாந்துக்கு இலகு வெற்றி

தென்னாபிரிக்காவில் நடந்துவரும் மகளிர் ரி20 கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியில் நேற்று மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து. 20 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 135 ஓட்டங்களை எடுத்திருந்தது அந்த அணி. தொடக்க வீராங்கனை ஹேலி மேத்யூஸ் சிறப்பாக ஆடி 42 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 8 பவுண்டரிகள் அடக்கம்.

மைன் காம்பெல் 34 ஓட்டங்கள் (4 பவுண்டரிகள்) எடுக்க, சினெல்லே ஹென்றி, அஃபி பிளெட்சர் ஆகியோர் தலா 14, 10 ஓட்டங்கள் எடுத்தனர். மற்றைய எவரும் ஒற்றை இலக்க ஓட்ட எண்ணிக்கையைத் தாண்டவில்லை. உதிரிகளாக 18 ஓட்டங்கள் கிடைத்தன. இங்கிலாந்து அணியின் சோஃபி எக்லெஸ்டோன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி 14.3 பந்துப் பரிமாற்றங்களிலேயே 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாட் ஸ்கிவர்–பிரண்ட் 40 ஓட்டங்கள் விளாசினார். அதில் ஒரு சிக்ஸரும் 6 பவுண்டறிகளும் அடக்கம். சோபியா டங்க்லி ஒரு சிக்ஸர் 4 பவுண்டறிகள் அடங்கலாக 34 ஓட்டங்களைப் பெற்றார். அணித் தலைவர் ஹீதர் நைட் ஒரு சிக்ஸர் 4 பவுண்டறிகள் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற்றார். சினெல்லே ஹென்றி இரண்டு இலக்குகளைச் சரித்திருந்தார்.

# நியூஸிலாந்தை துவம்சம் செய்து இலகு வெற்றி பெற்றது ஆஸி.

மகளிர் ரி20 உலகப் கோப்பையின் மற்றொரு ஆட்டத்தில் ஆஸ்திரேலிய பெண்கள் அணி நியூஸிலாந்து அணியை மிக இலகுவாகத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியை வென்ற நியூஸிலாந்து அணியினர் முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தனர். துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸி அணிக்கு முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. 4 ஆவது பந்தில் பெத் மூனி ஓட்டம் எதுவும் பெறாமலேயே ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் மெக்லானிங் தொடக்க வீராங்கனை அலிசா ஹீலியுடன் இணைந்து அணிக்கு நல்ல தொடக்கத்தைக் கொடுத்தார். இந்த இணை 2ஆவது விக்கெட்டுக்கு 70 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டது.

மெக் லானிங் 33 பந்துகளில் 41ஓட்டங்களை விளாசிய நிலையில் ஆட்டமிழந்தார். 7 பவுண்டறிகள் அதில் உள்ளடக்கம். எல்லிஸ் பெர்ரி 40 ஓட்டங்களையும் கிரேஸ் ஹாரிஸ் 14 ஓட்டங்களையும் பெற்ற நிலையில் அணி 20 பந்துப் பரிமாற்ற முடிவில் 9 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது. லியா தகுகூ மற்றும் அமெலியா கெர் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு தொடக்கம் மிக மோசமாக அமைந்தது. எதிர்கொண்ட முதல் பந்துகளிலேயே ஓட்டமெதுவும் எடுக்காமலேயே ஆட்டமிழந்தனர். அணியின் மூன்று வீராங்கனைகள் ஓட்டமெதும் எடுக்காமலும் 5 வீராங்கனைகள் ஒற்றை இலக்கஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க ஆஸி. அணி தனது ஆதிக்கத்தை ஆணித்தரமாக நிலைநாட்டியது.

பெர்னாடின் பெசுய்டன்ஹவுட், அமெலியா கெர், ஜெஸ் கெர் ஆகியோர் 14, 21, 10 ஓட்டங்களைப் பெற அணி 14 பந்துப் பரிமாற்றங்களில் வெறும் 76 ஓட்டங்களுக்குள் அனைத்து இலக்குகளையும் இழந்து சுருண்டது. ஆஸி. இலகு வெற்றியைப் பதிவு செய்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2023 இல் வெளியிடப்பெற்றது.